வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 28.04.2025 திங்கட்கிழமை | இதழ் : 119 | பக்கங்கள் : 12

# தமிழரின் அபிலாசைகள் இன்னமும் மாறவில்லை!

## மக்கள் நிரூபிக்க வேண்டும் என்கிறது தமிழ் அரசு

- பிரதான தமிழ் கட்சி இன்றும் நாங்களேதான்!
- ஜே. வி. பி. அதிகார பகிர்வில் நம்பிக்கையற்றது

- குமார. கோகுலன் -



வவுனியா, ஏப். 28

**தமிழரின் அரசியல் அபிலாசைகள் அப்பிடியேதான் உள்ளன. அவற்றில் மாற்றம் எதுவுமில்லை. இதனை நாட்டுக்கும் உலகுக்கும் தெரிவிப்பதற்காக உள்ளூராட்சி சபைகள் தேர்தலை மக்கள் பயன் படுத்த வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன்.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டம் நேற்று வவுனியா புளியங்குளத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், வவுனியா வடக்கில் போருக்கு பின்னர் கடும் வேகத்தில் குடியேற்ற செயல்பாடுகள் நடைபெறுகின்றன. வவுனியா வடக்கு பிரதேச சபையில் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி ஆட்சியமைப்பதற்காக நாம் பல்வேறு செயல்பாடுகளை எடுத்திருந்தோம். இன்று நிலைமை மாறியிருக்கிறது. நாட்டை ஆட்சி செய்யும் ஓர் அமைப்பு இந்த பிரதேச சபையை கைப்பற்றுவதற்கு போட்டியிடுகிறது. மத்தியிலே

11

ஜி. எஸ். பி. பிளஸ் வரி சலுகை

# ஐரோப்பிய குழு இன்று வருகிறது!

## பயங்கரவாத தடுப்புச் சட்டம் குறித்து அமைச்சரவை இன்று முக்கிய முடிவு

கொழும்பு, ஏப். 28

ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை வழங்குவது தொடர்பான நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் இலங்கையின் முன்னேற்றம் குறித்து மதிப்பிடுவதற்காக ஐரோப்பிய ஒன்றிய குழு இன்றைய தினம் நாட்டுக்கு வருகை தரவுள்ளது.

எதிர்வரும் மே 7ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருக்கும் இந்த குழுவினர் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அரச அதிகாரி கள், எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள், சிவில் சமூகம், வணிக சங்கங்கள் மற்றும்

11

# க. பொ. த. உயர்தர பரீட்சை: 9,458 மாணவர்களுக்கு 3 'ஏ'

## 29,244 பேர் சித்தியடையவில்லை!

கொழும்பு, ஏப். 28

கடந்த வருடம் நடந்த க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றிய 9 ஆயிரத்து 458 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் அமித் ஜெயசுந்தர உறுதிப்படுத்தினார்.

இதேநேரம், 29 ஆயிரத்து 244 பரீட்சார்த்திகள் மூன்று பாடங்களிலும் சித்தி பெறத் தவறியுள்ளனர். இதன்படி, 2024 ஆம் ஆண்டு உயர்தரப்

11

# வட, கிழக்கில் மே 2 வரை மழை வீழ்ச்சி தொடரும்!

## மின்னலின்போது அவதானம் அவசியம்

யாழ்ப்பாணம், ஏப். 28

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைக்கும் மழை எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது என்று காலநிலை அவதானிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை தலைவருமான கலாநிதி நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும்

11




# வீரர்களின் போர் துடுப்பாட்டம் சமநிலையில் நிறைவடைந்தது

யாழ்ப்பாணம், ஏப். 28

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்ட போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரு கல்லூரிகளுக்கும் இடையில் 23ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய

11

# காய்ச்சலால் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஏப். 28

காய்ச்சல் காரணமாக குடும்பப் பெண் ஒருவர் நேற்று உயிரிழந்தார்.

கொழும்புத்துறை, இரண்டாம் குறுக்குத் தெருவை சேர்ந்த கமலநாதன் ராஜபத்மினி (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் நேற்று முன்தினம் காய்ச்சலால் பீடிக்கப்பட்டார். இதையடுத்து அன்றையதினம் மாலை யாழ். போதனா மருத்துவமனையில்

11

# விடாது கொட்டிய மழையால் கிளிநொச்சியில் வெள்ளம்!



கிளிநொச்சி, ஏப். 28

நேற்றைய தினம் சுமார் ஒரு மணிநேரம் விடாது கொட்டித் தீர்த்த கனமழையால் கிளிநொச்சியில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

வீடுகளுக்குள் புகுந்த வெள்ளத்தை வெளியேற்ற முடியாது மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. அத்துடன், தாழ்வான பகுதிகளில் வீதிகளில் தேங்கி நின்ற வெள்ளத்தால் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது. (ஐ)

# தேசிய மட்டத்தில் முதலிடங்களை பிடித்த மாணவர்களின் விவரங்கள்

கொழும்பு, ஏப். 28

கடந்த ஆண்டு நடந்த க. பொ. த. உயர்தர பரீட்சையில் தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களின் பட்டியலை பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.


அதன் விவரம் வருமாறு,

**உயிரியில் பிரிவு**

முதலாமிடம் - சந்திதி நிம்தர ஹெகொட ஆராச்சி - மலியதேவ பெண்கள் கல்லூரி,

11

# திருத்தந்தையின் கல்லறை மக்கள் அஞ்சலிக்காக திறப்பு



வத்திக்கான், ஏப். 28

திருத்தந்தை பிரான்சிஸின் கல்லறை மக்களின் அஞ்சலிக்காக நேற்று ஞாயிற்றுக்கிழம திறக்கப்பட்டது.

காசா சாண்டா மார்ட்டாவின் பஸிலிக்காவில் நல்லடக்கம் செய்யப்பட்ட திருத்தந்தையின் கல்லறை அவ ரின் விருப்பப்படி மிக எளிமையான

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூகுள் வரைபடம் மூலமாக எல்லையிட்டே வனவளத் திணைக்களம் காணி எடுத்தது!

## மக்களின் காணிகளை அளிப்போம் என்கிறார் அநுர

வவுனியா, ஏப். 28

வடக்கில் போர் முடிவடைந்த பின்னர் வனவளத் திணைக்களம் கூகுள் வரைபடத்தின் மூலமாக பார்த்தே காணிகளுக்கு எல்லை யிட்டது. அது தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு மக்களின் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த பிரசார கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், எமது பரம்பரை யுத்தம் செய்தது. ஆனால், அடுத்த பிள்ளைகளின் பரம்பரைக்கும் அதனை விடமாட்டோம். பிரிவினைவாத அரசியல் முடிவுக்கு வந்துள்ளது. இழந்த ஒற்றுமையை நிச்சயம் கட்டியெழுப்புவோம். இனவாதத்தை இல்லாமல் செய்து தேசிய ஒற்றுமையை வளர்ப்போம்.

வடக்கில் பல இடங்கள் போரால் பாதிக்கப்பட்டன. மக்கள் வீடுகளை இழந்தனர், பாதைகளை இழந்தனர், தாய்மார்கள் பிள்ளைகளையும், கணவர்களை மனைவிமாரும் இழந்தார்கள், நண்பர்களை இழந்தனர் துன்பமான நிலைதான் இருந்தது. அதுதான் யுத்தம். தற்போது போர் முடிந்து 16 வருடங்கள் கழிந்துள்ளன. இன்னும் அதன் மிச்சசொச்சங்கள் இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் திஸ்ஸ விகாரை தொடர்பாக ஒரு பிரச்னை இருக்கிறது. அந்த காணிகளின் உரிமையாளர்களும் விகாரையின் பிக்குமாரும் பேசி அந்தப் பிரச்னையை தீர்ப்பார்கள். தீர்க்க இடமளிக்காமல் இருப்பது அரசியல். அவர்களின்தேவை இதனூடாக இனவாதத்தை தூண்டுவது. வடக்கில் தோல்வி கண்ட அரசியல்வாதிகள் அந்த இடத்திலே ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். தென் பகுதியில் தோல்விகண்ட அரசியல் தலைவர்கள் ஆங்காங்கே முரண்பாட்டை ஏற்படுத்த முனைகிறார்கள். நாங்கள் காணி உரிமையாளர்கள், பிக்குமார்கள் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவோம். இந்த பிரச்னையை தீர்க்க முடியும். சட்டங்களை புதிதாக அமைத்தாவது இனவாதத்தை களைவோம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முதலாவது ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் உருவாக்கப்படும். தமிழ் பேசும் திறமையானவர்களை இலங்கை கிரிக்கெட் அணியில் இணைக்கவேண்டும்.

போரின் பின்னர் கூகுள் வரைபடத்தை பார்த்தே வனவளத்திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் மக்களின் காணிகளை



எடுத்தார்கள். அந்த காணிகளை நேரடியாக சென்று பார்த்து அதனை அளவீடு செய்து எடுக்கவில்லை. காடாக இருக்கும் காணிகளை பார்த்தார்கள் எடுத்தார்கள். மக்களின் காணிகள் அதற்குள்ளே இருக்கிறது. விவசாய காணிகள் உள்ளன. குளங்கள் உள்ளன. எனவே, மீண்டும் அதனை ஆய்வு செய்து அனைத்து காணிகளையும் இந்த மக்களுக்கு பெற்றுக்கொடுப்போம் - என்றார். (ஐ-10)

# என்.பி.பிக்கு 7 எம்.பி. கிடைக்க தமிழ் அரசு கட்சியே காரணம்!

## சிவசக்தி ஆனந்தன் குற்றச்சாட்டு

வவுனியா, ஏப். 28


வடக்கில் ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைப்பதற்கு தமிழ் அரசுக் கட்சியே காரணம் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்பாளரை ஆதரித்து பூந்தோட்டத்தில் பிரச்சார கூட்டம் நேற்று நடந்த கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், இன்று வட மாகாணத்தில் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியில் வருவதற்கு காரணம் தமிழ் அரசுக் கட்சியே ஆகும். அவர்களின் செயல்பாடுகள்தான் இன்று ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டு வந்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஒரு ஜனாதிபதி இன்று உள்ளூராட்சி மன்றங்களையும் தங்களுக்கு தருமாறு கூறுவது எந்த வகையில் நியாயமாக இருக்கும்? நாங்கள் எங்களுடைய தமிழ்க் கட்சிகளை ஆதரிக்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வாக்குச் சீட்டு என்பது வெறும் காகிதம் அல்ல. அது பல வலிகளையும் வேதனைகளையும் சுமந்த ஒரு விடயம். இத்தனை ஆயிரம் போராளிகளையும் மக்களையும் இழந்து விட்டு இன்று தேசிய கட்சி ஒன்றின் பின்னால் செல்ல முடியாது. அவ்வாறு இருக்குமாக இருந்தால் எமது போராட்டம் வீணானதாக அமைந்துவிடும் - என்றார். (ஐ-10)

# வவுனியா வடக்கில் தமிழ் அரசு பிரசாரம்



வவுனியா, ஏப். 28

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான பிரசாரக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை புளியங்குளத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டம் தமிழ் அரசு கட்சியின் வவுனியா வடக்கு வேட்பாளர் த. தனுசன் தலைமையில் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், இரா. சாணக்கியன், தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் மற்றும் தமிழ் அரசு கட்சியின் வவுனியா வடக்கு பிரதேச சபையின் வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ - 10)

# மின்னல் தாக்கத்தால் உடுவிலில் வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 28

மின்னல் தாக்கம் காரணமாக வீடு ஒன்று பகுதியளவில் சேதமடைந்ததாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்துள்ளார்.

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/208 கிராம சேவகர் பிரிவிலேயே இவ்வாறு வீடு சேதமடைந்தது.

இந்த சம்பவத்தில் இரு குடும்பங்களை சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-05)

# கர்ப்பவதி சிகிச்சை நிலையங்கள் இன்று முதல் முடங்கும் அபாயம்!

## மேலதிக நேர கொடுப்பனவு தடையால்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் பொது சுகாதார சேவைகள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்களுக்கான சிகிச்சை நிலையங்களின் சேவைகள் இன்று திங்கள்கிழமை தொடக்கம் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான மேலதிக நேர கொடுப்பனவுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எங்கும் நடைமுறைப்படுத்தப்படாத நடைமுறையை யாழ். மாநகர சபையின் கணக்காளர் பகுதி தன்னிச்சையாகச் செயல்படுத்த முன்வந்துள்ளதாகவும்

எந்தவொரு நிதிச் சுற்றறிக்கை மூலமும் பிரசுரிக்கப்படாத நடைமுறையை யாழ். மாநகர சபையின் கணக்காளர் பகுதி மேற்கொள்ள முயன்றுள்ளதாகவும் குடும்பநல உத்தியோகத்தர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தநிலையில், இன்று திங்கட்கிழமை முதல் தமது சேவைகளை முடக்குவதற்கும் அவர்கள் முனைந்துள்ளனர். இதனால் பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு முற்றுமுழுதான பொறுப்பை யாழ். மாநகர சபை ஆணையாளரும், கணக்காளர் பகுதியும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-02)

# 'கல்வி ஆய்வின் அடிப்படைகள்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 28

தேசிய கல்வி நிறுவனத்தின் ஆய்வுகள் அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எஸ். கே. பிரபாகரன் எழுதிய 'கல்வி ஆய்வின் அடிப்படைகள்' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யூனியன் கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ச. லலீசன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். யாழ் பல்கலைக்கழக கல்வியற்துறைத் தலைவர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் நூல் ஆய்வுரையை நிகழ்த்தவுள்ளார். (ஐ)

# விவசாயிகளின் பல கோடி ரூபாய் பணம் மோசடி குறித்து விசாரிக்குக!

## கிளிநொச்சி விவசாயிகள் ஜனாதிபதிக்கு மனு

கிளிநொச்சி, ஏப். 28

உரிய நிதி கையாளலின்றி கிளிநொச்சி விவசாயிகளிடம் இருந்து அறவிடப்பட்ட பல கோடி ரூபாய் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் நீதியான விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி அநுர குமாரவுக்கு மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்ட அந்த மனுவில்,

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் வாழ்வாதாரத் தொழிலான விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளான நாங்கள் போரால் பாதிக்கப்பட்டது மட்டுமல்லாது கடந்த காலங்களில் ஏற்பட்ட இயற்கை அழிவுகள், நோய்த் தாக்கங்கள் என்பவற்றாலும் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்கியுள்ளோம்.

அவ்வாறிருந்தும் ஒவ்வொரு போகத்திலும் மாவட்ட பயிர்செய்கை கூட்டத் தீர்மானங்களின் படி கட்டுப்பணங்களை செலுத்தி வருகிறோம். குறிப்பாக வாய்க்கால் பராமரிப்பு குளத்தின் பராமரிப்பு கமவிதானை கொடுப்பனவுகள் என்பவற்றையும் முறையாக செலுத்தி வருகின்றபோதும் அதற்கான நிதிகளும் குறிப்பிட்ட சில கமக்கார அமைப்புகளால் கமநல சேவை நிலைய அதிகாரிகளின் துணையுடன் முறைகேடாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் எந்தவிதமான கணக்காய்வு [illegible] மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும் தங்களின் மேலான கவனத்துக்கு கொண்டு வருகிறோம்.

இதனைவிட இரணைமடு குளத்தின் கீழ் செயல்பட்டுவரும் இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் என்ற அமைப்பானது கமநல அபிவருத்தி திணைக்களத்தின் கீழ் செயல்பட்டு வருகிறபோதிலும் இதுவரை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் கீழ் பதிவு செய்யப்படாமல் அதற்கான நிர்வாகக் கட்டமைப்பு 2017ஆம் ஆண்டுக்கு பின்னர் புனரமைப்பு செய்யப்படாமலும் இயங்கி வருகிறது.

அத்துடன், இரணைமடு குளத்தின் கீழ் உள்ள விவசாயிகளிடம் இருந்து கடந்த 2017ஆம் ஆண்டு முதல் பெரும்போகத்திலும் சிறுபோகத்திலும் ஏக்கர் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் குறித்த சம்மேளனத்தால் தொடர்ச்சியாக அறவிடப்பட்ட பல கோடி ரூபா நிதிக்கு என்ன நடந்துள்ளது என்று தெரியாமலே முறையற்ற விதத்திலே செலவிடப்பட்டிருக்கிறது. அத்துடன், கடந்த காலங்களில் அதிகாரிகள் சிலரின் ஊழல்களுக்காக ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டு அதன் மூலம் கிடைத்த நிதிக்கும் என்ன நடந்துள்ளது என்பது தெரியாது போயுள்ளது.

இந்த நிதி முறைகேடுகளுக்கு பின்னால் மாவட்டத்தின் உயர்நிலை அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் துணையாக இருக்கின்றனர். பொருளாளர், செயலாளர், தலைவர் உள்ளிட்ட சிலரே நிதியை கொள்ளையிட்டு நன்மையடைந்து வருகின்றனர் - என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.04.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 15

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

## விகாரை அரசியல்

விகாரைகளை இலங்கையின் இன அரசியலிருந்து பிரிக்க முடியாது. அந்தளவுக்கு பின்னிப்பிணைந்திருக்கிறது. இலங்கையின் சிங்கள தேசியவாத அரசியல் கட்டமைப்பு என்பதே விகாரைகளை மையப்படுத்திய ஒன்றுதான். வாவி, தூபி, காவி என்னும் அடிப்படையில் இலங்கையின் சிங்கள சமூக அரசியல் கட்டமைப்பு வளர்ந்து வந்திருக்கிறது.

நவீன உலக சிந்தனையில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும்கூட, உள்ளூர் அரசியலில் புரதான செல்வாக்கு என்பது இப்போதும் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றாகவே இருக்கிறது. இந்தப் பின்புலத்தில், இலங்கைத் தீவு சிங்கள மக்களுக்கு வாக்களிக்கப்பட்ட பூமி என்பது போலவே சிங்கள - பௌத்த கட்டமைப்புகள் சிந்திக்கின்றன. இதனை விரும்பியோ - விரும்பாமலோ சிங்கள அரசியல்வாதிகள் தங்களின் கடமையாகப் போற்றி வருகின்றனர்.

பௌத்தம் அமைதியையும் ஜீவகாருண்யத்தையும் போற்றும் மதமாக இருப்பினும்கூட, இலங்கைத் தீவில் அதன் பிரயோகம் முற்றிலும் அரசியல் மேலாதிக்கத்தின் கருவியாகவே இருந்திருக்கிறது. கிறிஸ்தவர்களான சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஜெயவர்த்தன ஆகியோர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலேயே பௌத்தத்தைத் தழுவிக் கொண்டனர் என்பது வரலாறு. ஏனெனில், சிங்கள - பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்டிருக்கும் நாட்டில் கிறிஸ்தவர்களாக இருந்தால் அதிகாரத்துக்கு வரமுடியாது என்னும் அடிப்படையில்தான் அவர்கள் பௌத்தர்களானார்கள். அப்போதிருந்தே பௌத்த மதக்கட்டமைப்புகளை அதாவது, காவியை திருப்திப்படுத்தும் அரசியலை மேற்கொள்வது ஓர் எழுதாத விதியானது.

இலங்கையின் இன முரண்பாடுகள் தீவிரமடைந்த நிலையில் அரசியலும் பௌத்தமும் இரு ஆயுதங்கள் போன்றே தொழில்பட்டன. வடக்கு - கிழக்கில் விகாரைகளை நிறுவுவதை ஓர் அரசியல் நிகழ்ச்சிநிரலாகவே இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் முன்னெடுத்திருந்தன. புத்தசாசன அமைச்சின் ஆசீர்வாதத்துடன் தொல்பொருள் திணைக்களம் இந்த முயற்சிகளுக்கு செங்கம்பளம் விரித்தது.

இதன் விளைவாகவே தமிழ்த் தேசிய அரசியலில் விகாரையை எதிர்த்தல் என்னும் விடயம் உட்புகுந்தது. குறிப்பாக, 2009இற்கு பின்னரான சூழலில்தான் இந்த விடயம் தமிழர் அரசியலில் பிரதான விடயமானது. விடுதலைப் புலிகளின் காலத்தில் இராணுவ பலத்தின் அடிப்படையில் விடயம் அளவிடப்பட்டதால் விகாரைகளை கருத்தில் கொள்ள வேண்டிய தேவை ஏற்படவில்லை. தவிர, விடுதலைப் புலிகள் அமைப்பு விகாரை எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கவும் இல்லை.

வழிபாட்டுத் தேவைகளுக்கு அப்பால் வடக்கு - கிழக்கில் விகாரைகள் நிறுவப்படுகின்றன என்பது உண்மை. அதேவேளை, அதனை அரசியலாக்கும் முயற்சிகளும் தீவிரமடைந்திருக்கின்றன என்பதும் உண்மை. அரச காணிகளை முறைப்படி பெற்று பிக்குகள் விகாரை அமைப்பதைத் தடுக்க முடியாது. இலங்கையில் மதம் தொடர்பான கொள்கை நிலைப்பாடு மாற்றப்படும் வரையில் அது சாத்தியமற்ற ஒன்று.

ஒருவர் தனியார் காணி ஒன்றை விலைக்குப் பெற்று அதில் விகாரைகளை நிறுவினாலும் அதனைத் தடுக்க முடியாது. அப்படியாயின், என்ன செய்வது என்னும் கேள்வி எழலாம். இங்குள்ள கேள்வி சிங்கள மக்களை திட்டமிட்டு குடியேற்றும் நோக்கில் அல்லது தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை பலாத்காரமாக கையகப்படுத்தி விகாரைகளை நிறுவ முற்படும்போது மட்டும்தான் அதனை எதிர்க்கலாம். ஆனால், அதனையும் சட்ட ரீதியாகத்தான் மேற்கொள்ள முடியும்.

## வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி கலைப்பிரிவில் முதலிடம்

வவுனியா, ஏப். 28

உயர்தர பரீட்சையில் கலைப் பிரிவில் வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி முகம்மது பைசல் பாத்திமா அஸ்ரா முதல் இடம்பிடித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில் கலைப் பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற பாத்திமா அஸ்ரா என்ற மாணவி தமிழ், அரசியல், பொருளியல் ஆகிய பாடங்களில் ஏ சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 94 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

(எ-10)



## கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் கணிதப்பிரிவில் முதலிடம்

வவுனியா, ஏப். 28

உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் வவுனியா கனகராயன்குளம் மகா வித்தியாலய மாணவன் குகதாசன் தனோஜன் முதலாமிடம் பிடித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின. இதில், கணிதப் பிரிவில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் குகதாசன் தனோஜன் என்ற மாணவன் மூன்று பாடங்களில் ஏ சித்திகளை பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 144 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

குறித்த பாடசாலையின் வரலாற்றில் மாணவன் ஒருவன் முதலாம் இடத்தை



பெறுவது இதுவே முதல் முறையாகும். (எ-10)

## மன்னார் சித்தி விநாயகர் இந்துப் பாடசாலை மாணவி பவதாரணி கலைப்பிரிவில் முதலிடம்

மன்னார், ஏப். 28

உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி முதல் இடம் பிடித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

இதில் கலைப் பிரிவில் மன்னார் கல்வி வலயத்தை சேர்ந்த மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை மாணவி ஜெயந்தன் பவதாரணி 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் 84ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

(எ)



## அரச கட்சியின் பிரசார கூட்டத்தை நிறுத்துமாறு கூறிய இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 28

அமைச்சர் பிமல் ரத்நாயக்க பங்கேற்றிருந்த தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டத்தை நிறுத்துமாறு கோரிய நபரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகரை அண்டிய கொட்டடி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தேசிய மக்கள் சக்தியின் பிரசார கூட்டம் நடை பெற்றது.

இதன்போது, அங்கி ருந்த இளைஞர் ஒருவர் கூட்டத்தை நிறுத்திவிட்டு தேசிய மக்கள் சக்தியினரை வெளியேற வேண்டும் என்று கூறினார். இதைத் தொடர்ந்து, கூட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த முனைந்தார் என்ற குற்றச் சாட்டில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபரை பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் -26 திங்கட்க்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 15
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : பிரதமை




**மேடம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். தலைசுற்றல் முழங்கால் வலி வந்து நீங்கும். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**இடபம்**

கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. எதிலும் கவனம் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

குடும்பத்தாரின் எீண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். சிறப்பான நாள்.

**கடகம்**

தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும்.

**சிம்மம்**

கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். புதியவரின் நட்பால் ஆதாயமடைவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**

சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சில நேரங்களில் நன்றி மறந்தவர்களை நினைத்து வருத்தப்படுவீர்கள்.

**துலாம்**

விலை உயர்ந்த மின்னணு பொருட்களை வாங்குவீர்கள். உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**

சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர் பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். அமோகமான நாள்.

**தனுசு**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**மகரம்**

முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள்.

**கும்பம்**

குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மீனம்**

குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். புது நட்பு மலரும்.

பொறியியல் தொழில்நுட்ப பிரிவில்

# யாழ். மத்திய கல்லூரி மாணவன் பிரவீன் மாவட்ட ரீதியில் முதல் இடம் பிடித்தார்



யாழ்ப்பாணம், ஏப். 28

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

அந்தவகையில் பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவன் வியாகர்ணன் பிரவீன் மாவட்ட ரீதியாக முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியாக 97ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இவர் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் ஏ சித்தியையும், தொழில் நுட்பத்துக்கான விஞ்ஞானத்தில் ஏ சித்தியையும், பொறியியல் தொழில்நுட்பத்தில் பி சித்தியையும் பெற்றுள்ளார்.

(எ-05)

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாதனை

யாழ்ப்பாணம், ஏப். 28

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி 55 - 3ஏ சித்திகளையும், 55 - 2ஏ சித்திகளையும், 19ஏ, 2பி சித்திகளையும் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சாதனை படைத்துள்ளது.

அந்தவகையில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் 22- 3ஏ சித்திகளும், 13 - 2ஏ சித்திகளும், 06 ஏ, 2பி சித்திகளும், பௌதீக விஞ்ஞான பிரிவில் 27 -3ஏ சித்திகளும், 16- 2ஏ சித்திகளும், 11 ஏ 2பி சித்திகளும், வணிகத் துறையில் ஒரு 3ஏ சித்தியும், இரண்டு 2ஏ சித்திகளும், இரண்டு ஏ 2பி சித்திகளும், கலைப்பிரிவில் இரண்டு 2ஏ சித்திகளும், பொதுப் பிரிவில் மூன்று 3ஏ சித்திகளும், ஒரு 2ஏ சித்திகளும், உயிரியல் தொழில்நுட்ப பிரிவில் ஒரு 3ஏ சித்தியும், இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவில் ஒரு 3ஏ சித்தியும் பெற்று சாதனை படைத்துள்ளது.

**உயிரியல் விஞ்ஞான பிரிவு**

ஜமுனானந்தா பிரணவன் 3ஏ, ஜமுனானந்தா சரவணன் 3ஏ, ராஜன் ஆபிராம் 3ஏ, சிறிசுந்தரராஜா சிறீகாந்த் 3ஏ, டெனி கொன்ஸ்ரன்ரைன் லொஹான் ஸ்ரென்விஜ் 3ஏ, சதீஸ்குமார் லதீசனன் 3ஏ, ஜெசிதரன் லதுர்சன் 3ஏ, சிவயோகன் விஷ்ணுஜன் 3ஏ, சிவரஞ்சன் மாதுளன் 3ஏ, முரளிமோகன் மிருணளன் 3ஏ, சிவகுமாரன் சங்கீதனன் 3ஏ, சோதிநாதன் வசீகரன் 3ஏ, தேவானந் ஆனந்தராஜ் 3ஏ, சாந்தகுமார் கவின் 3ஏ, ரமணீதரன் ரதுக்சன் 3ஏ, சந்திரகுமாரன் சங்கீதம் 3ஏ, விஜயகுமார் ஆகாஷ் 3ஏ, லட்சுமிகாந்தன் லிசோகன் 3ஏ,




சுபாஷ்கரன் கஜாணன் 3ஏ, கிருஷ்ணவசீகரன் தீனுசன் 3ஏ, கணநாதன் தருண் 3ஏ, விக்னேஷ்வரமூர்த்தி பரத்வாசன் 3ஏ, சிவஞானம் துளசிகன் 2ஏ பி, சுகந்தன் சபிஷன் 2ஏ பி, சுபாஷ்கரன் கஜன் 2ஏ பி, நவரத்தினராசா நிருத்திகன் 2ஏ பி, சிவகுமார் ஹரீசான் 2ஏ பி, உதயாதரன் கிருபரன் 2ஏ பி, சாந்தகுமாரன் கலியுகன் 2ஏ பி, கருணாகரன் மயூரேஷ் 2ஏ பி, சுதன் விஷ்ணு 2ஏ பி, பரமானந்தம் நிகேசன் 2ஏ சி, கேதீஸ்வரன் கரிஜன் 2ஏ சி, அன்ரனிசில்வா டனுசன் 2ஏ சி, மகேஷ்வரன் கஜன் 2ஏ சி

**பௌதிக விஞ்ஞான பிரிவு**

மலர்வண்ணன் அகரன் 3ஏ, சதீஸ்குமார் அபிசகேதிவர் 3ஏ, குருபரன் சங்கரன் 3ஏ, ரெஜினோல்ட்ஸ்கரன் ஜெருஷன் 3ஏ, சுரேந்திரநாதன் லாவண்யன் 3ஏ, சிறீஸ்கந்தராசா கஜலக்சன் 3ஏ, அன்ரனி ஜோர்ஜ் பிரின்ஸியம் 3ஏ, பரமேஸ்வரன் சுடரழகன் 3ஏ, செல்வநாயகம் தமீசன் 3ஏ, சண்முகனேசன் குணாளன் 3ஏ, சுஜீவகுமார் சிவேதயன் 3ஏ, செந்தில்குமார் நிதர்சன் 3ஏ, சத்தியசீலன் தேனுஜன் 3ஏ, ஜெகதீசன் ஆர்த்திகன் 3ஏ, ஜெயபாலன் துஷியந் 3ஏ, குகநாதன் டிரோ சென் 3ஏ, சிறிகிருஷ்ணகாந்தன் புதுமிகன் 3ஏ, கணேஷ்வரன் அனுசன் 3ஏ, முருகானந்தன் சங்கமன் 3ஏ, விக்னராஜா திரே ஷன் 3ஏ, தவபாலன் பகீரதன் 3ஏ, கிருபாகரன் பிரணவன் 3ஏ, அருள்நேசன் மகிந்தன் 3ஏ, ரவிச்சந்திரன் சோபிதன் 3ஏ, நிரஞ்சன் சாகித்தியன் 3ஏ, புவனேந்திரன் சஞ்சீவன் 3ஏ, கோபாலகிருஷ்ணன் கஜதக்சன் 3ஏ, சிவகுமாரன் அபினாஷ் 2ஏ பி, நக்கீரன் ஆதித்தியன் 2ஏ பி, முகுந்தன் பிரணவன் 2ஏ பி, ஹெய்ஞ்சர்லஸ் ஹெட்ரியன் 2ஏ பி, சந்திரகாந்தன் நந்தலாலன் 2ஏ பி, ராசேஷ்வரன் மகிழ்ரஞ்சன் 2ஏ பி, விஜயசந்திரன் சிறிகஜன் 2ஏ பி, செல்வமகேசன் அபிரூபன் 2ஏ பி, பிரணவசொருபன் குருஷேத்திரன் 2ஏ பி, புஷ்பராஜ் கிருஷாந் 2ஏ பி, பரஞ்சோதி விஷ்ணுஜன் 2ஏ பி, சரவணபவன் செரோன் 2ஏ பி, தயாபரகுருக்கள் யதுசனன் 2ஏ பி, அரவிந்தன் அபேர்நாத் 2ஏ பி, உதயதேவன் 2ஏ சி, சதாநந்தன் ஜூஜிந்தன் 2ஏ சி

**பொது பிரிவு**

ஜெயமோகன் பபிசன் 3ஏ, ஜெயராசன் அபிநயன் 3ஏ, ரகுமார் தருண் 3ஏ, சிறிதரன் தர்மிகன் 2ஏ பி

**வணிகப் பிரிவு**

விஜயசுந்தரம் வரணன் 3ஏ, காந்தரூபன் சஞ்சய் 2ஏ பி, குகநாதன் மிதுசன் 2ஏ சி

**உயிரியல் தொழில்நுட்பம்**

ஜெகதீஸ்வரன் துஷாந் 3ஏ

**பொறியியல் தொழில்நுட்பம்**

சற்குணராசா சந்தோஷ் 3ஏ

**கலைப் பிரிவு**

முருகமூர்த்தி நயனன் 2ஏ பி, யோகசீலன் சாருஜன் 2ஏ பி.

(எ-05)

# யாழ். ஹாட்லி கல்லூரி சிறந்த பெறுபேறு

யாழ்ப்பாணம், ஏப். 28

உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் ஹாட்லி கல்லூரி சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளது.

அந்தவகையில் கணிதப் பிரிவில் 21 -3ஏ சித்திகளையும், உயிரியல் பிரிவில் 5 -3ஏ சித்திகளையும், வணிகப் பிரிவில் ஒரு 3ஏ சித்தியையும், கலைப் பிரிவில் ஒரு 3ஏ சித்தியையும் பெற்றுள்ளது.

**கணிதத்துறை**

கந்ததாசன் தர்சத் 3ஏ, யோகேந்திரன் அர்ணிகன் 3ஏ, ஜெயசந்திரன் நிவேதன் 3ஏ, ஜெயகுமார் நிவீதிகன் 3ஏ, நிர்மலன் சலின் 3ஏ, அன்ரன் ஜேசுராசா ஜூட் பிரியதர்ஷன் 3ஏ, சிவனேசன் அர்ணிகன் 3ஏ, ராமேஸ்வரம் சதுர்சன் 3ஏ, சிவரஞ்சன் தனோஜ் 3ஏ, அஞ்சனகுமார் ஷாகிஞ்சை 3ஏ, முருகானந்தன் சாருஜன் 3ஏ, ரகு சரவணன் 3ஏ, நாகேஷ்வரன் கிஷ்ணமேனன் 3ஏ, ஜெயகுமார் விஷ்ணுராஜ் 3ஏ, சுபாகு அட்சயன் 3ஏ, மோகன் அர்ஜூன் 3ஏ, சுப்ரமணியம் அர்ஜூன் 3ஏ, குகநாதன் வைகுந்தன் 3ஏ, ஸ்ரீலயந்திரா அஞ்சனன் 3ஏ, முருகமூர்த்தி பிரவீன் 3ஏ, கஜேந்திரன் ஸ்னேகன் 3ஏ, சண்முகதாஸ் கீர்த்தி 2ஏ பி

**உயிரியல் பிரிவு**

கிருபாகரன் கஜீவன் 3ஏ, சந்திரபபா மதுசன் 3ஏ, உதயகுமரன் மதுமிதன் 3ஏ, வித்யாபதி ஹர்சன் 3ஏ, சுபேந்திரன் தினேஷ் 3ஏ, தேவதாஸ் தேவானந்தா 2ஏ பி, திருச்செல்வம் கௌதம் 2ஏ பி

**பொறியியல் தொழில்நுட்பம்**

கிரீபரூபன் ஜனார்த்தன் 3பி, நீதிராஜ் நிதுஜன் 2பி சி, தயாபரன் மதிவாணன் 2பி சி, ஜில்பேர்ட் யோகராசா கியூ பேட் கிருஷனன் 2பி எஸ், அகிலரூபன் கவீசன் பி 2சி

**வணிக பிரிவு**

தங்கவேல் அனுசன் 3ஏ

**கலைப் பிரிவு**

சுப்பிரமணியம் மதுசன் 3ஏ, சந்திரசேகரம் நிதர்சன் 2ஏ பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் பாதாள குழுக்களை கட்டுப்படுத்த புதிய பாதுகாப்பு திட்டம்!

கொழும்பு, ஏப். 28

**உள்ளூராட்சித் தேர்தல் காலத்தில் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த படையினரின் ஆதரவுடன் புதிய விரிவான பாதுகாப்பு திட்டத்தை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

இந்தப் பாதுகாப்புத் திட்டத்தில், பொலிஸ் சிறப்பு படையை சேர்ந்த அதிகாரிகள், அரச புலனாய்வு அமைப்புகள், சிவில் உடையில் பொலிஸ் அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது தவிர, ரோந்து நடவடிக்கைகள், மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலன்னாவை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர் டான் பிரியசாத்தின் கொலையைத் தொடர்ந்து, சில நபர்களின் தொடர்புகளின் அடிப்படையில், பாதாள உலகக் குற்றங்கள் நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

பல்வேறு அரசியல் கட்சிகளில் சேர்வதற்காக பாதாள உலகக் குழுக்கள் மிகவும் நுட்பமான தந்திரோபாயங்களை பயன்படுத்தலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பொன்னர் சங்கர் கூத்துக்காக கம்பம் மீதேறியவர் விழுந்து பலி!

நுவரெலியா, ஏப். 28

பொன்னர் சங்கர் கூத்துக்காக 60 அடி உயர கம்பத்தில் ஏறியவர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

நுவரெலியா - நானுஓயா கிளாஸ்கோ தோட்டத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த எம். சதாசிவம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

பொன்னர் சங்கர் வரலாற்று நாடக நிகழ்ச்சி நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு ஆரம்பமாகி அதிகாலை வரை தொடர்ந்திருந்தது.

இதில், ஒரு கதாபாத்திரம் உயரமான கம் பத்திலேறி தவம் செய்வதாக அமையும். இதற்காக 60 அடி உயரமான கம்பத்தில் ஏறிய போதே குறித்த நபர் தவறி விழுந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# அதிபாதுகாப்பு சிறையிலிருந்த ஹரக் கட்டாவிடம் கைபேசி மீட்பு

கொழும்பு, ஏப். 28

பிரபல போதைப் பொருள் வர்த்தகரான ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நந்துன் சித்தக சிறைக்குள்பயன்படுத்திய கைபேசி கைப்பற்றப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைக்குள் இருந்த ஹரக் கட்டா, தற்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் தங்காலை பழைய சிறைச்சாலையில் பலத்த பாதுகாப்புடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவரின் சிறைக்கூடத்திற்குள் இருந்து கைபேசி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

பலத்த பாதுகாப்பு மற்றும் தீவிர கண்காணிப்பில் இருக்கும் ஒரு கைதிக்கு கைபேசி எவ்வாறு கிடைத்தது என்பது தொடர்பில் தற்போதைக்கு தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையே ஹரக் கட்டாவிடம் இருந்து கைபேசி கைப்பற்றப்பட்ட சம்பவம் கேள்வியுற்றதும் அவருக்கு எதிராக சாட்சியங்களை அளித்தவர்கள் அச்சமடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# ஆற்றிலிருந்து சடலம் மீட்பு!

கொழும்பு, ஏப். 28

களனி ஆற்றிலிருந்து அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கம்பஹா - பேலியகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் இந்த சடலம் மீட்கப்பட்டது.

சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

உயிரிழந்தவர் சுமார் 50 வயது மதிக்கத்தக்க 5 அடி 6 அங்குல உயரம் கொண்டவர் எனவும்,

நீல நிற ரி- சேர்ட் அணிந்திருந்ததோடு, இடுப்புக்கு கீழே உடை இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

உடல் சிறிதளவு சிதைந்த நிலையில் இருப்பதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சடலம் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் விதிகள் மீறல் 3,000ஐ நெருங்குகிறது!

கொழும்பு, ஏப். 28

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக தேசிய தேர்தல்கள் ஆணையகத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை மூவாயிரத்தை நெருங்குகிறது.

தேர்தல் ஆணையத்தின் கூற்றுப்படி, 2025 மார்ச் 20 முதல் தேசிய தேர்தல்கள் ஆணையகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் முறைப்பாட்டு பணிமனைகளில் மொத்தம் 2 ஆயிரத்து 843 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம், கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் சட்டங்களை மீறின என்று 191 சம்பவங்களும், தேர்தல் தொடர்பான 29 பிற முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று தேர்தல்கள் ஆணையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் எதிர்வரும் மே 6 ஆம் திகதி நடைபெற உள்ளமை தெரிந்ததே. (ஐ)

# நாட்டின் பொருளாதாரம் டிசெம்பரில் வீழ்ச்சியடையும்!

நவம்பர் - டிசெம்பர் மாதங்களில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடை யும் என்று ஐக்கிய தேசியக் கட் சியின் தலைவர் வஜிர அபே வர்த்தன தெரிவித்துள்ளார்.

தனக்குத் தெரிந்த பொருளாதார அறிவின்படி, இது நிச்சயமாக நடக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். ஆனால், மக்கள் அதைப் பற்றி பயப்படத் தேவையில்லை என்று கூறிய அவர்,

"இலங்கை வீழ்ச்சியடையும் போது நாங்கள் அதைப் பார்த்துக் கொள்வோம். நாடு வீழ்ச்சியடையும்போது, தான் அந்த இடத்தைப் பிடித்தாலும் இல்லாவிட்டாலும் அதைக் காப்பாற்ற முன்வருவேன் - என்றார்.

காலி - தலப்பிட்டி பிரிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனை கூறியுள்ளார். (ஐ)

# ஜனாதிபதி அநுர தலைமையில் ஆளும் கட்சியின் மே தின கூட்டம்

கொழும்பு, ஏப். 28

தேசிய தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்துள்ள பேரணி அன்றைய தினம் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில், அரச தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெறும்.

இதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில், அதன் தலைவர்களின் பங்கேற்புடன் நுவரெலியா - தலவாக்கலை நகரில் மே தினக் கூட்டத்தை நடத்த ஐக்கிய மக்கள் சக்தி முடிவு செய்துள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன தற்போது நுகேகொடை ஆனந்த சமரகோன் திறந்தவெளி அரங்கில் மே தினக் கூட்டங்களை நடத்த தீர்மானித்துள்ளதுடன், நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான சிறீ லங்கா சுதந்திர கட்சியினர் கொழும்பிலும் மே தின கூட்டங்களை நடத்த வுள்ளனர்.

மே தினக் கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி இன்னும் எடுக்கவில்லை என்றும் தெரிய வருகின்றது.

# 5 வயதுக்கு குறைவான இறப்பு பிரேத பரிசோதனை கட்டாயம்!

கொழும்பு, ஏப்.

5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் உயிரிழந்தால், பிரேத பரிசோதனை கட்டாயமாகும் என்று நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு மரண விசாரணை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

மரண விசாரணை அதிகாரிகளுக்கு வெளியிட்ட சுற்றறிக்கை யில்,நாட்டில் குழந்தை இறப்பு பகுப்பாய்வின் ஒரு முக்கிய அங் கம். 5 வயதுக்குட்பட்ட குழந் தைகளின் இறப்பு விகிதங்களுக்கான பொதுவான காரணங்களை கண்டறிந்து, அத்தகைய இறப்புகளைத் தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க இந்த நடைமுறை விதிக்கப்பட்டது வதாக அமைச்சின் மூத்த அதி காரிகள் கூறினர். "இந்த இறப்பு விகிதங்களைக் குறைக்க இந்த இறப்புகளுக்குப் பின்னாலுள்ள காரணங் களை ஆய்வு செய்து பகுப்பாய்வு செய்ய பிரேத பரிசோதனை முடிவுகள் பயன்படுத்தப்படும்."

தாய்வழி இறப்பு விகிதங்கள் குறைவாக இருந்ததன் சமீபத்திய வெற்றியைத் தொடர்ந்து, இலங்கையின் சுகாதார குறிகாட்டிகளை மேம்படுத்த அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தற்போது, ஒரு குழந்தையின் மரணம் சந்தேகத்துக்குரிய தீங்கு, சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் அல்லது விபத்துகளை உள்ளடக்கியதாக இருக்கும்போது [illegible] பிரேத பரி சோதனைகள் நடத்தப்படு கின்றன. இருப்பினும், புதிய சட்டம் ஐந்து வயதுக் குட்பட்ட அனைத்து குழந் தைகளுக்கும் உள் பரிசோதனைகளை கட்டாயமாக்கும், மருத்துவ வல்லுநர்கள் ஏற்கனவே இறப்புக்கான காரணத்தை தீர்மானித்த சந்தர்ப்பங்களில் கூட. நிபுணர்கள் இந்தக் கொள்கையை தேவையற்றதாகவிமர்சித்துள்ளனர். மரணம் சந்தேகத்திற்கு ரியதாக இல்லாத போது பிரேத பரிசோதனை எப்போதும் தேவையில்லை என்று குறிப் பிட்டுள்ளனர். ஒவ்வொரு பிரேத பரிசோத னைக்கும் சுமார் ரூ. 15,000 செல வாகும் என்றும், இது வழக்க மான பரிசோதனைகளை கணி சமான வளங்களை வீணாக்குகிறது என்றும் அவர் [illegible]

# ஏ. எல். பரீட்சை பெறுபேறுகளை வலைதளங்களில் பகிராதீர்கள்

கொழும்பு, ஏப். 28



உயர்தர பரீட்சை பெறுபேறுகளை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைத் தவிர்க்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க அறிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் பெறுபேறுகளை வெளியிடும் போது உரிய நபரின் சுட்டெண் வேறு நபர்களிடம் சென்றடைவதால் அதனைக் கொண்டு வேறு நபர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும். அதனைக் கணினி முறைமையிலிருந்து அகற்றி உரிய நபர்கள் விண்ணப்பிப்பதற்கு மீள ஏற்பாடுகள் செய்வதற்கு நீண்ட நாட்கள் எடுக்கும்.

எனவே, உயர்தர பெறுபேறுகளை சமூ கவலைத்தளங்களில் பகிர்வ தைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது பாதுகாப்பு அமைச்சர் உடன் பதவி விலகவேண்டும்!

## தயாசிறி ஜயசேகர வலியுறுத்து



கொழும்பு, ஏப். 28

அண்மைய நாட்களாக இலங்கையில் இடம்பெற்றுவரும் தொடர் கொலைகளில் சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு பொறுப்பு கூறவேண்டிய பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தனது கடமைகளில் தவறிவிட்டுள்ளார். இதனால், அவர் தமது அமைச்சு பதவியை இராஜிநாமா செய்ய வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சட்டம் மற்றும் ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சர் தனது பொறுப்புகளை சரியாக நிறைவேற்றவில்லை. எந்தவோர் அமைச்சரும் பதவியேற்கும்போது தனக்கு ஒதுக்கப்படும் கடமைகளை நிறைவேற்றுவதாக உறுதியளிக்கிறார். அதன் பிரகாரம்தான் அவருக்கான நிறுவனங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படுகின்றன. தனது அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களையும் திறம்பட நிர்வகிப்பதது அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் பொறுப்பு. ஆனால், அமைச்சர் இந்தக் கடமைகளில் தோல்வியடைந்துள்ளார். அதனால் அவர் பதவி விலக வேண்டும்.

கடந்த சில வாரங்களில் 31 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நாட்டில் நடந்துள்ளன. இவற்றில் 27 பேர் கொல்லப்பட்டனர்.

அரசியல் ஆர்வலர் கள் உட்பட பொது மக்களும் ஆபத்தான விகிதத்தில் கொல்லப்படுகின்றனர். பொதுஜன பெரமுன செயல்பாட்டாளர் டான் பிரியசாத்தின் கொலைக்கு பொலிஸ்மா அதிபர் உட்பட மூத்த அதிகாரிகளே பொறுப்பு - என்றார். (அ)

# சட்டம் - ஒழுங்கு, பொருளாதாரம் பூச்சியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளன!


## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு, பொருளாதாரம் என அனைத்தும் பூச்சிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் கொலைகள் மிக சரளமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. கொள்ளையர்களை கைது செய்வதாக்கூறி இந்த அராசங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், இன்று கொள்ளையர்கள்தான் அரசாங்கத்தை சிறைப்பிடித்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கேகாலையில் நடந்த கூட்டத்திலேயே இவ்வாறு கூறினார்.

மேலும், நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு, பொருளாதாரம் என அனைத்தும் பூச்சியநிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் கொலைகள் மிக சரளமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நீதிமன்றத்துக்குள்கூட கொலைகள் இடம்பெறுகின்றன. அந்தக் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான செவ்வந்தி என்ற பெண் இன்னும் கைது செய்யப்படவில்லை.



இதுவே தற்போதைய அரசாங்கத்தின் நிலைமையாகும்.

கொள்ளையர்களை கைது செய்வதாகக் கூறி இந்த அராசங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால், இன்று கொள்ளையர்கள்தான் அரசாங்கத்தை சிறைப்பிடித்துள்ளனர். ஜே. வி. பியின் கடந்த காலத்தை முன்னுதாரணமாகக் கொண்டு தற்போதைய துப்பாக்கிதாரிகள் தமது செயல்பாடுகளை அச்சமின்றி முன்னெடுத்துச் செல்கின்றனர். 1971, 1988, 1989 மற்றும் 30 ஆண்டு கால யுத்தத்தால் 40 ஆயிரம் கோடி டொலரை இழந்தோம். ஆனால், எமது கடன் 10 ஆயிரம் கோடி டொலர் மாத்திரமே.

அவ்வாறெனில் கடனைவிட அதிக இழப்புக்கு ஜே. வி. பியும் பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறான நிலைமையில் தற்போது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பதிலாக அதனை சிறிது சிறிதாக அழித்துக் கொண்டிருக்கின்றனர். (ஐ)

# தென்னக்கோன்மீதான விசாரணை நால்வர் பொலிஸ் குழு நியமனம்!

கொழும்பு, ஏப். 28

**பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பதவியை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நால்வர் கொண்ட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தனது அதிகாரங்களை பயன்படுத்தி துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரிக்க விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகவே நால்வர் கொண்ட பொலிஸ் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னதாக, பொலிஸ் விசாரணைக் குழுவொன்றை நியமிக்க பரிந்துரைக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு விசாரணைக் குழு கடந்த வெள்ளிக்கிழமை கடிதம் ஊடாக அறிவித்திருந்த நிலையில் இந்த பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கோட்டையிலிருந்து தவறிவிழுந்து மாணவன் பலி!

கொழும்பு, ஏப். 28

கோட்டை சுவரிலிருந்து தவறி விழுந்து மாணவன் ஒருவர் உயிரிழந்தார். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத் தின் முதலாம் ஆண்டு மாணவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந் தவராவார்.

உயிரிழந்த இளைஞர், தனது நண்பர்களுடன் காலி கோட்டையை பார்வையிடச் சென்ற போது கோட்டை சுவரிலிருந்து தவறி விழுந்தார்.

படுகாயமடைந்த காலி கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வீதியில் ஒருவரை தாக்கிய சந்தேகநபர்கள் இருவர் கைது

கொழும்பு, ஏப். 28

வீதியில் கடுமையாக மோதிக் கொண்ட சம்பவம் தொடர்பில் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சமூகவலைதளங்களில் வெளி யான காணொலியை அடுத்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - கிரிபத்கொடையில் இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறியவரு வதாவது, தாக்குதலுக்கு உள்ளான நபர் ஒரு தனியார் நிறுவனத் தின் உரி மையாளர். அவர், தனது நிறுவனத்தில் பணிபுரிந்த ஓர் இளம் பெண்ணை தனது வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளார்.

இதைத் தொடர்ந்து, அந்த நிறுவனத்தின் உரிமையாளருக்கும் இளம் பெண்ணின் காதலன் எனக் கூறப்படும் நபருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, அந்தப் பெண்ணுக்கும் காதலனுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் பெண்ணின் காதலன் என்று கூறப்படும் நபர் வேறொருவருடன் சேர்ந்து வீதியில் வைத்து நிறுவனத்தின் உரிமையாளரை தாக்கியுள்ளார். இது தொடர்பான காணொலி சமூகவலைத்தளத்தில் பரவியதைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் களினியை சேர்ந்த 22, 24 வயது நபர்களாவார். (ஐ)

# பாகிஸ்தானுடன் யுத்தம் ஏற்படுமானால் இந்திய பகுதியாக இலங்கை கருதப்படும்!

## பிரேம்நாத் தொலவத்த சாடல்

கொழும்பு, ஏப். 28

"அணிசேரா வெளிநாட்டு கொள்கையிலிருந்து வெளியேறி தற்போதைய அரசாங்கம் பக்கச்சார்பான கொள்கையையே பின்பற்றுகிறது. துரதிர்ஷ்டவசமாக இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் அறிவிக்கப்பட்டால் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக எண்ணக்கூடிய நிலைமைகூட ஏற்படலாம்", என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

பிராந்திய நாடுகளுக்கு இடையில் யுத்த நிலைமை ஏற்படும்பட்சத்தில் அது இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். கடந்த காலங்களில் இந்தியா, பாகிஸ்தான் இடையே யுத்த நிலைமை ஏற்பட்டபோது சிறிமாவோ பண்டாரநாயக்க குமாரதுங்க போன்ற அரச தலைவர்கள் அமைதியை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன், செயல் பட்டிருக்கின்றனர். ஆனால், தற்போதுள்ள தலைவர்களுக்கு அவ்வாறான இயலுமை இல்லை. இந்தியாவுடன் அரசாங்கம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் என்ன என்பது நாட்டுக்கு தெரியாது.

அன்று இந்திய எதிர்ப்பு கொள்கையால் நாட்டில் வன்முறையை ஏற்படுத்திய ஜே. வி. பி. இன்று இரகசிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடுகின்றது. இவ்வாறு எம்மால் ஒருதலைப் பட்சமாக செயல்பட முடியாது. பாகிஸ்தானும் எமது முன்னெடுப்புகளை அவதானிக்கிறது. பக்கச்சார்பாக செயல்பட்டால் பிராந்தியத்தில் மோதல்கள் ஏற்படுமே தவிர அமைதியை ஏற்படுத்த முடியாது.



அணிசேரா வெளிநாட்டு கொள்கையிலிருந்து வெளியேறி தற்போதைய அரசாங்கம் பக்கச்சார்பான கொள்கையையே பின்பற்றுகிறது. துரதிர்ஷ்டவசமாக இந்தியா - பாக்கிஸ்தான் யுத்தம் அறிவிக்கப்பட்டால் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக எண்ணக்கூடிய நிலைமைகூட ஏற்படலாம். காரணம் அரசாங்கம் பல்வேறு முக்கிய விடயங்களை மறைத்து வைத்திருக்கிறது. அரசாங்கம் பொறுப்புடன் செயல்படாவிட்டால் அரசியல் ரீதியிலும் சமூக ரீதியிலும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார். (ஐ)

# ஏற்றுமதி சந்தைகளை விரிவாக்கம் செய்யுங்கள்

## இலங்கையிடம் நாணய நிதியம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 28

அமெரிக்க ஜனாதிபதியின் பரஸ்பர வரி விதிப்பு தீர்மானம் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் சவாலாக உள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் துறையின் இயக்குநர் கிருஷ்ணா சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இந்த சவாலை எதிர்கொள்வதற்கு இலங்கை ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துவதுடன் முதலீட்டுக்கான சிறந்த சூழலை ஏற்படுத்தவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வாஷிங்டனில் இடம்பெற்ற உலக வங்கியின் கூட்டத் தொடரில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

மேலும், இலங்கை வரிசுமையால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நாடு என்பதனால் ஏற்றுமதி சந்தைகளை விரிவுபடுத்துவதன் ஊடாக அமெரிக்காவின் வரிவிதிப்பு பாதிப்பை எதிர்கொள்ள முடியும்.

குறிப்பாக தனியார்முதலீட்டை ஊக்குவிப்பதற்கு தேவையான சூழலை ஏற்படுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ரூ. 14,500 கோடி பெறுமதியான பிணைமுறிகள் நாளை ஏலம்!

கொழும்பு, ஏப். 28

14 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் நாளை செவ்வாய்க்கிழமை ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 4 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும்

182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை மூலம் விற்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆட்சியை கவிழ்க்கும் சூழ்ச்சிக்கு மக்கள் இடமளிக்க மாட்டார்கள்!

## ரில்வின் சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 28

**வாய்ப்புக் கிடைத்தால் ஆட்சியை கவிழ்ப்பதற்கு எதிர்க் கட்சிகள் காத்திருக்கின்றன. மக்கள் எமக்கு 5 ஆண்டுகளுக்கான ஆணையை வழங்கியிருக்கின்றனர். எனவே, ஆட்சி கவிழ்ப்புக்கான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டால் மக்கள் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார்கள். ரணில், சஜித் இந்நாட்டின் ஜனாதிபதியாக வேண்டுமென நினைத்தால் அது அவர்களின் நிறைவேறாத கனவாகும் - இவ்வாறு ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**



களுத்துறை - வலல்லா விட்ட பிரசார கூட்டம் ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஆண்டு டிசெம்பரில் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாவார் என கபீர் ஹசீம் கூறுகிறார்.

இந்த ஆண்டு தேர்தலொன்று இல்லாத நிலையில் அவர் எவ்வாறு இந்த கருத்தை வெளியிட்டார்? வாய்ப்பொன்று கிடைத்தால் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக காத்துக் கொண்டிருக்கின்றனர். மக்கள் எமக்கு 5 ஆண்டுகளுக்கான ஆணையை வழங்கியிருக்கின்றனர். அதில் இன்னும் ஓர் ஆண்டு கூட நிறைவடையவில்லை.

எதிர்வரும் 5 ஆண்டுகளுக்கு மாத்திரமின்றி, அதற்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கும் மக்கள் எமக்கு வாக்களிப்பர் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே, ரணில், சஜித் இந்நாட்டின் ஜனாதிபதியாக வேண்டும் என்று எண்ணினால் அது அவர்களின் நிறைவேறாத கனவாகவே இருக்கும். கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடிய பின்னர் ரணில் ஜனாதிபதியானார். அவ்வாறான சம்பவம் மீண்டும் மீண்டும் இடம்பெறும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இது மிகவும் முட்டாள்தனமான எதிர்பார்ப்பாகும். இது முற்றுமுழுதாக மக்களின் ஆணையையும் நம்பிக்கையையும் பெற்ற ஆட்சியாகும். எனவே, எவருக்கும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மக்கள் இடமளிக்கப் போவதில்லை என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது.

மே 6ஆம் திகதி தேர்தலின் பின்னர் நாம் அதனை உறுதிப்படுத்திக் காண்பிப்போம். நாம் இந்த நாட்டில் மாற்றமொன்றை ஏற்படுத்தியிருக்கிறோம் - என்றார். (ஐ)

# இந்தியாவை நம்பியிருப்பது பெரும் அச்சுறுத்தலாக மாறும்!

## உதய கம்மன்பில கூறுகிறார்

கொழும்பு, ஏப். 28

வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையில் இந்தியாவை நம்பியிருப்பது தேசிய பாதுகாப்புக்கு என்றாவது ஒருநாள் அச்சுறுத்தலாக அமையும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

நிகழ்வு ஒன்றின் பின்னர் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தியாவுடன் கைச்சாத்திட்ட 7 ஒப்பந்தங்களை அரசாங்கம் இதுவரையில் பகிரங்கப்படுத்தவில்லை. இந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்துமாறு எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்பினரும் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தும் நிலையில் இந்தியாவின் அனுமதியுடன் தான் இந்த ஒப்பந்தங்களை பகிரங்கப்படுத்த முடியும்" என்று அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவை பேச்சாளரின் கருத்து முற்றிலும் பொய்யானது. இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள 7 ஒப்பந்தங்களில் இரண்டு ஒப்பந்தங்களை நான் முழுமையாக பரிசீலனை செய்தேன். ஒப்பந்தங்களில் எவ்விடத்திலும் இந்தியாவின் அனுமதியை பெற வேண்டும் என்று குறிப்பிடவில்லை.

இந்தியா நிலப்பரப்பில் பெரிய நாடாக இருக்கலாம் அதற்காக அரசாங்கம் அச்சமடையக்கூடாது. இலங்கை நிலப்பரப்பில் சிறிய நாடாக இருந்தாலும் சுயாதீன நாடு. இலங்கையின் இறையாண்மையை இந்தியா மதிக்கின்ற போது இந்த அரசாங்கம் ஏன் மலினப்படுத்துகிறது என்பதை அறிய முடியவில்லை.

பாகிஸ்தானுக்கு விநியோகிக்கும் தண்ணீரை முடக்குவதாக இந்தியா பாகிஸ்தானுக்கு தற்போது கடுமையான அச்சுறுத்தல் விடுக்கிறது. இலங்கையானது வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையில் இந்தியாவை நம்பியிருப்பது இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் - என்றார். (ஐ)

# இரத்தினபுரி மருத்துவமனையில் 166 பணியாளர்களுக்கு டெங்கு!

கொழும்பு, ஏப். 28

கடந்த 10 நாட்களில் இரத்தினபுரி மருத்துவமனையில் பணியாற்றும் 166 பேர், டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இரத்தினபுரி மாவட்டத்தில் மாத்திரம் இந்த வருடத்தில் ஆயிரத்து 465 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கபில கன்னங்கர தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் பரவலைத் தொடர்ந்து இரத்தினபுரி மருத்துவமனை வளாகத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்படும் புதிய கட்டடங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதன் காரணமாக நுளம்புகள் பெருகி டெங்கு நோய் பரவியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



திருத்தந்தை பிரான்சிஸின் நித்திய இளைப்பாறுதலுக்காக நேற்று முன்தினம் சிறப்பு திருப்பலி இலங்கைக்கான அப்போஸ்தலிக்க தூதுவர் பிரையன் உதய்வே தலைமையில் கொழும்பு புனித லூசியா தேவாலயத்தில் நடைபெற்றபோது...!

# சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 28

இந்த மாதத்தின் கடந்த நான்கு வாரங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாடுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. அந்த வகையில் இந்தியாவிலிருந்தே அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். அத்துடன், பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சீனா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 120 வகை மருந்துகளுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடு!

கொழும்பு, ஏப். 28

நாட்டில் 120 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருந்தாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்து உற்பத்தி தொடர்பான நிபுணத்துவம் கொண்ட தரப்பினரின் பற்றாக்குறையின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பல பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும், அவை தொடர்பில் கலந்துரையாடுவ தற்கேனும் தற்போதைய சுகா தார அமைச்சர் தயாராக இல்லை என அரச மருந்தாளர்கள் சங்கத் தின் தலைவர் துஷார ரணதேவ கூறினார். (அ)

# “இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்துக”

கொழும்பு, ஏப். 28

இந்தியா - பாகிஸ்தான் இடையில் நீண்டகாலமாகக் காணப்பட்ட மோதல்கள் தற்போது யுத்தமாக மாற்றமடையக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் அது இலங்கையிலும் தாக்கம் செலுத்தக்கூடும். எனவே, இப்போதாவது இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நீண்டகாலமாகக் காணப்பட்ட மோதல்கள் தற்போது ஒவ்வொரு இடங்களிலும் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. பாகிஸ்தான் மாத்திரமின்றி பங்களாதேஷுடனும் இந்தியா அதிருப்தியிலேயே உள்ளது. இவ்வாறு அயல் நாடுகளுக்கிடையில் அமைதியற்ற நிலை ஏற்பட் டுள்ள நிலையில் இலங்கைக்கும் அது பாதிப்பாகும்.

எனவே, அண்மையில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையின்போது செய்து கொள்ளப்பட்ட பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் என்ன என்பதை அரசாங்கம் பாராளுமன்றத்துக்காவது வெளிப்படுத்த வேண்டும்.



எவ்வாறிருப்பினும், இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எந்தவொரு செயல்பாட்டுக்கும் இலங்கையின் நிலப்பரப்பை மாத்திரமின்றி நீர்ப்பரப்பையும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என உறுதியளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதன் ஆழ் கருத்து என்ன என்பது அரசாங்கத்தைத் தவிர யாருக்கும் தெரியாது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே யுத்த நிலைமை ஏற்பட்டால் இலங்கையுடன் இந்தியா செய்து கொண்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தொடர்பில் அரசாங்கம் தெரிவுபடுத்த வேண்டியது கட்டாயமாகும். எவ்வாறிருப்பினும் எமக்கு அதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை - என்றார்.

# 80 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 28

சுமார் 80 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின், ஐஸ் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - வெல்லம்பிட்டி - கொட்டிகாவத்தை பகுதியில் வைத்து சந்தேகநபர் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் கடுவலை - கொரதொட்ட பகுதியை சேர்ந்த 27 வயதான நபராவார். கைதானவரிடமிருந்து, 13 கிலோ 372 கிராம் ஹெரோயின், 3 கிலோ 580 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சம்பவம் தொடர்பில் வெல்லம்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணிகளை செய்ய தொல்லியல் திணைக்கள தடையை நீக்க வேண்டும்!

## ஜனாதிபதியிடம் ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

திருகோணமலை, ஏப்.28

**திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள் தொடர தொல்லியல் திணைக்களத்தின் தடைகளை நீக்க ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி வேலைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோணேஸ்வரர் ஆலய திருப்பணி விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்பு வேலைகள் சீராக செய்யமுடியாத வகையில் தெல்லியல் திணைக்களம் தடுத்துவருகின்றது.

ஆலயத்துக்காக லண்டனிலிருந்து கொண்டு வரப்பட்ட 1200 கிலோ எடையுடைய மணி கடந்த ஒருவருட காலமாக பொருத்தப்படாது திருகோணமலையில் வைக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு கட்டட நிர்மானத்தையும் செய்யவிடாது திருகோணமலை சூழலில் இருக்கின்ற தொல்லியல் திணைக்களம் தடுத்து வருகின்றது.

இந்து சமய நிறுவனங்கள் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரதமருக்கும் குறித்த விடையங்கள் தொடர்பாக தெளிவு படுத்தி உள்ளார்கள்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, அண்மையில் இலங்கைக்கு வருகைதந்தபோது திருக்கோணேஸ்வரம் செல்வார் என அறியப்பட்டது. ஆனால், அவரது திருக்கோணேஸ்வரப் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், திருக்கோணேஸ்வரர் ஆலயத் திருப்பணியில் இந்திய அரசாங்கம் ஆர்வமாக உள்ளது என இந்தியப் பிரதமர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முதல் இலங்கையில் ஒர் அறிவித்தல் விடுத்துள்ளார்.

குறித்த ஆலயத் திருப்பணி தொடர்பாக இந்தியத் தூதரக அதிகாரிகள் பல தடவைகள் வருகை தந்து ஆலயத்திருப்பணி வேலைகள் தொடர்பாக கேட்டறிந்தார்கள். எனினும், எந்தவொரு திருப்பணி வேலைகளையும் ஆரம்பிக்க முடியாதுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார, திருக்கோணேஸ்வரர் ஆலயம் செல்கின்ற வழிகளில் அரசியல் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அப்புறப்படுத்தி கோணேஸ்வரர் ஆலய சுற்றாடலை சீரான முறையில் ஒழுங்குபடுத்தி அங்கு செல்கின்ற மக்கள் இளைப்பாறுவதற்கான மண்டபம், மணிக்கூட்டுக் கோபுரம் போன்றவற்றை அமைப்பதற்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியை வழங்கி, திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆறு. திருமுருகன் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

## முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே மாவட்டம் திருகோணமலையே!

திருகோணமலை, ஏப். 28

ஒப்பீட்டு விகிதாசார அடிப்படையில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரே மாவட்டம் திருகோணமலை மாவட்டமாகும் என சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

எனவே, இதனை நிரூபித்து காட்டுவது மட்டுமல்லாமல் முஸ்லிம்களும் இந்த நாட்டின் கௌரவிக்கப் படவேண்டிய ஒரு தேசிய இனம் என்பதையும் இம்மாவட்டத்தில் இம்முறை 6 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆட்சியை கைப்பற்றி இந்த அரசுக்கு தக்க பாடம் புகட்டுவோம் எனவும் குறிப்பிட்டார்.எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, ரவூப் ஹக்கீம் கிழக்கு மாகாணத்துக்கு மேற்கொண்டிருந்த தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் ஓர் அங்கமாக நேற்று உரையாற்றும் போதே மேற்கண்ட வாறு தெரிவித்தார். (எ)

## பொறியியல் பீடத்துக்கு மாணவன் தசாகரன் தெரிவு

மட்டக்களப்பு, ஏப். 28

நேற்று முன்தினம் வெளியான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி மட்டக்களப்பு மாவட்டத்தின் அதிகஷ்ட பிரதேசமான பனையறுப்பான் பிரதேசத்திலிருந்து பொறியியல் பீடத்துக்கு நேசதுரை தசாகரன் என்ற மாணவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பல கஷ்டங்களை எதிர்கொண்டு, அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று இந்த நிலையை அவர் அடைந்திருக்கிறார்

ஏ 2பி பெறுபேற்றை பெற்று மாவட்ட ரீதியில் 59ஆவது நிலையை அடைந்து பொறியியல் பீடத்துக்கு தெரிவாகியுள்ள குறித்த மாணவன் தான் பிறந்த பனையறுப்பான் கிராமத்துக்கும் இடை நிலைக் கல்வியை கற்ற பாடசாலைக்கும் பெருமையை தேடிக்கொடுத்துள்ளார்.

இலங்கையில் அதிகஷ்ட, கஷ்ட பிரதேச பாடசாலைகளை மாத்திரம் கொண்ட மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய பாடசாலைகளிலிருந்து



தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் பொறியியல் பீடம் மருத்துவ பீடத்துக்கு மாணவர்கள் தெரிவாகி வருகின்றனர்

அந்த வகையில் இம்முறையும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்திலிருந்து பொறியியல் பீடத்துக்கு 3 பேரும் மருத்துவ பீடத்துக்கு ஒருவரும் தெரிவானதுடன் அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலிருந்து பொறியியல் பீடத்துக்கு ஒருவர் தெரிவானதுடன் அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத்திலிருந்து பொறியியல் பீடத்துக்கு ஒருவரும் தெரிவாகியுள்ளனர். அத்துடன் வர்த்தக கலைப் பிரிவிலும் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய மாணவர்கள் இம்முறையும் சாதித்துள்ளனர். (எ)

## பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் சாதித்தது மட்டக்களப்பு மாவட்டம்

மட்டக்களப்பு, ஏப். 28

நேற்று முன்தினம் வெளியான உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மாவட்ட நிலையில் விஞ்ஞானப் பிரிவில் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை மாணவி முதலிடத்தை பிடித்துள்ளதுடன் இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலை பெற்றுள்ளது.

அத்துடன் கலைப்பிரிவில் மாவட்ட நிலையில் முதல் இடத்தை மட்டக்களப்பு மகாஜனக்கல்லூரி மாணவி பெற்றுள்ளதுடன் வர்த்தகப் பிரிவில் காத்தான்குடி மீராபாலிகா தேசிய பாடசாலை மாணவி பெற்றுள்ளார்.

அத்தோடு, மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் 12 மாணவர்கள் பொறியியல் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

## கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் 10 மாணவிகள் மருத்துவபீடத்துக்கு தெரிவு

கல்முனை, ஏப். 28

க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி அம்பாறை மாவட்டம், கல் முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் (தேசிய பாடசாலை) 10 மாணவிகள் மருத்துவபீடத் துக்கு தெரிவாகியுள்ளனர். இதில், மாவட்ட நிலையில் 1,4,28,35,37,43, 49,60, 63,67 ஆகிய நிலைகளை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் பெற்றுள்ளனர்.

மருத்துவ பீடத்துக்கு 10 மாணவிகளும் பொறியியல் பீடத்துக்கு 03 மாணவிகளும், உயிரியல் முறைமைகள் தொழில்நுட்ப பீடத்துக்கு 16 மாணவிகளும், வர்த்தக பீடத்துக்கு 12 மாணவிகளும், முகாமைத்துவ பீடத்துக்கு 08 மாணவிகளும் கலைப் பீடத்துக்கு 48 மாணவிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-06)

## மின்சாரம் தாக்கி மூதாட்டி

அம்பாறை, ஏப். 28

அம்பாறை பிரதேசத்தில் 72 வயது மூதாட்டி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

சம்பவதினத்தன்று குறித்த பெண் தனது வீட்டில் உள்ள மின் விளக்கை மாற்ற முயன்றபோது மின் விநியோகத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, கந்தப்பளை பகுதியில் 74 வயது முதியவர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பதற்காக மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே இவர் உயிரிழந்தார்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)





அம்பாறை மாவட்டம் கல்முனை மாவடிப்பள்ளி அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி 13 வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம் கலந்து கொண்டார். (படங்கள்:- நூருல் ஹுதா உமர்)

## உணவகம்மீது வழக்கு தாக்கல்

சாய்ந்தமருது, ஏப். 28


சாய்ந்தமருதில் மனித பாவனைக்கு உதவாத உணவை விற்பனைக்கு வைத்திருந்த உணவக உரிமையாளருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கியூ. ஆர். கோட் மூலமான முறைப்பாட்டை தொடர்ந்து சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் நடத்திய சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதைத் தொடர்ந்தே, மனித பாவனைக்கு உதவாத உணவுகளை வைத்திருந்த உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசர் பிரான்சிஸ் இறுதிச்சடங்கில் 50 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு



வத்திக்கான், ஏப். 28

பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச் சடங்கில் 50 நாடுகளின் தலைவர்கள் உட்பட 150 நாடு களின் பிரதிநிதிகள் பங்கேற்பை வத்திக்கான் நிர்வாகம் உறுதி செய்தது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது -88), உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21ஆம் திகதி வாடிகனில் மரணமடைந்தார். அவரது உடல் கடந்த 23ஆம் திகதி முதல் வாடிகன் புனித பீற்றர்ஸ் பேராலயத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

உலகம் முழுவதிலுமிருந்து இலட்சக்கணக்கான மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து போப் பிரான்சிஸ் உடலுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். இதனால் புனித பீற்றர்ஸ் சதுக்கம் நிரம்பி வழிந்தது. 3 நாட்களில் சுமார் இரண்டரை இலட்சம் பேர் பாப்பரசர் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை 10. 00 மணிக்கு பாப்பரசர் உடலுக்கு இறுதிச்சடங்கு நடைபெற்றது.

இதற்காக சிறப்பு வழிபாடு (திருப்பலி) நடத்தப்பட்டது. பின்னர் வாடிகனுக்கு வெளியே உள்ள புனித மேரி மேஜர் பசிலிக்கா பேராலயத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. பாப்பரசர் பிரான்சிஸ் விருப்பப்படியே அவருக்கு மிகவும் பிடித்தமான புனித மேரி பசிலிக்காவில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த நிலையில், பாப்பரசர் இறுதிச் சடங்கில் 50 நாடுகளின் தலைவர்கள் உட்பட 150 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பை வாடிகன் நிர்வாக உறுதி செய்தது.


இதன்படி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது மனைவியுடன் வாடிகன் நகருக்கு சென்று போப் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன், இங்கிலாந்து பிரதமர் கெயிர் ஸ்டார்மர், பிரிட்டன் இளவரசர் வில்லியம், பிரேசில் ஜனாதிபதி லூலா டா சில்வா என பல நாடுளின் தலை வர்கள் வாடிகன் வந்து, இறுதிச் சடங்கில் பங்கேற்றனர்.

இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு வாடி கன் சென்றார். 2 நாள் பயணமாக வாடிகன் சென்ற ஜனாதிபதி, இந்திய அரசு மற்றும் மக்கள் சார்பாக போப் பிரான்சிஸூக்கு அஞ்சலி செலுத்தினார்.

மறைந்த போப் பிரான்சிஸ் கடைசி விருப்பமாக தனது கல்லறையில் "பிரான்சிஸ்கஸ்" என்ற வார்த்தையை மட்டுமே பொறிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஈரான் துறைமுகத்தில் பயங்கர வெடிவிபத்து!

### 14 பேர் பலி, 750 பேர் படுகாயம்



தெஹ்ரான், ஏப். 28

ஈரான் துறைமுகத்தில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தால் 14 பேர் பலியாகினர். 750 பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானின் பாந்தர் அப்பாஸ் நகரில் துறைமுகம் உள்ளது. இது ஈரானின் மிகப்பெரிய வர்த்தகத் துறைமுகமாகும். இந்தத் துறைமுகத்தில் நேற்று முன்தினம் மிகப்பெரிய வெடிவிபத்து ஏற்பட்டது. துறைமுகத்தில் கண்டெய்னர்கள் நிறுத்தி வைத்திருந்த பகுதியில் இந்த வெடிவிபத்து ஏற்பட்டது.

ஏவுகணைகளுக்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் சேமித்து வைக்கப்பட்டிருந்த கண்டெய் னர்களை சரிவர கையாளாததால் இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள் ளது.

இதனால், உயிரிழந்தோர் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. மேலும், இந்தச் சம்பவத்தில் 750 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த வெடிவிபத்து குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# உக்ரைன் - ரஷ்யா இடையே நிபந்தனையற்ற போர் நிறுத்தம்

### ட்ரம்புடன் ஜெலன்ஸ்கி திடீர் சந்திப்பு



வத்திக்கான், ஏப். 28

உக்ரைன் - ரஷ்யா இடையே நிபந்தனையற்ற போர் நிறுத்தம். மற்றொரு போர் வெடிப்பதைத் தடுக்கும் நம்பகமான மற்றும் நீடித்த அமைதி குறித்து அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் ஆலோசித்ததாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது மனைவியுடன் வத்திக்கான் நகருக்குச் சென்று போப் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார். உக் ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, பிரான்ஸ் ஜனாதிபதி இமானு வேல் மக்ரோன், இங்கிலாந்து பிரதமர் கெயிர் ஸ்டார்மர், பிரிட்டன் இளவரசர் வில்லியம், பிரேசில் ஜனாதிபதி லூலா டா சில்வா என பல நாடுளின் தலைவர்களும் இறுதிச் சடங்கில் பங்கேற்றனர்.

போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்குக்கு முன்பு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை சிறிது நேரம் சந்தித்தார் என் பதை வெள்ளை மாளிகை மற்றும் ஜெலன்ஸ்கியின் அலுவலகம் உறுதிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையில், இந்தச் சந்திப்பு முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தத்தில் கவனம் செலுத்தியதாக ஜெலன்ஸ்கி கூறினார்.

இதுதொடர்பில் அவர் தனது எக்ஸ் வலைத்தளத்தில், "இது ஒரு நல்ல சந்திப்பு. நாங்கள் நேரில் நிறைய விடயங்கள் குறித்து விவாதித்தோம். நாங்கள் உள்ளடக்கிய அனைத்திலும் முடிவுகளை எதிர்பார்க்கிறோம். எங்கள் மக்களின் உயிர்களைப் பாதுகாத்தல், முழுமையான மற்றும் நிபந்தனையற்ற போர் நிறுத்தம்.

மற்றொரு போர் வெடிப்பதைத் தடுக்கும் நம்பகமான மற்றும் நீடித்த அமைதி. கூட்டு முடிவுகளை அடைந்தால், வரலாற்றுச் சிறப்புமிக்கதாக மாறக் கூடியதாக இந்தச் சந்திப்பு அமையும். அமெரிக்க ஜனாதிபதிக்கு நன்றி"-என்று அவர் பதிவிட்டுள்ளார். (எ)

# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

### சிறுமி உட்பட மூவர் பலி

கீவ், ஏப். 28

ட்ரம்ப் - ஜெலன்ஸ்கி சந்திப்புக்கு இடையே உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில், மூவர் பலியாகினர்

உக்ரைன் மீது 2022ஆம் ஆண்டு ரஷ்யா போர் தொடுத்தது. கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தப் போர் நீடித்து வருகிறது. இதில், உக்ரைனுக்கு ஆதரவாக பல ஐரோப்பிய நாடுகள் செயல்படுகின்றன. போரை நிறுத்துவது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் வெள்ளை மாளிகையில் சந்தித்து பேச்சு நடத்தினர். ஆனால், அதில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.

இதனையடுத்து உக்ரைன் மீதான போரை ரஷ்யா மேலும் தீவிரப்படுத்தியது. இதன்படி, நேற்று முன்தினம் உக்ரைனின் டொனெட்ஸ்க் பிராந்தியத்தை குறிவைத்து ரஷ்யா சரமாரி ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதனால், அங்குள்ள பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

இதில் சிறுமி உட்பட மூவர் பலியாகினர். முன்னதாக வத்திக்கான் நகரில் நடைபெற்ற பாப்பரசர் பிரான்சிஸின் இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் ட்ரம்ப் - ஜெலன்ஸ்கி சந்தித்து பேச்சு நடத்தினர்.

15 நிமிடம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது போரை நிறுத்துவது தொடர்பில் அவர்கள் விவாதித்தனர். இந்தச் சூழ் நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பாகிஸ்தானில் படையினர் அதிரடி 15 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

லாகூர், ஏப். 28

பாகிஸ்தானில் பயங்கரவாதிகளுக்கும் படையினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சண்டையில் 15 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் கிளர்ச்சிப்படை, தெக்ரிக் ஐ தலிபான் பாகிஸ்தான் உட்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்தப் பயங்கரவாத அமைப்புகளுக்கும் படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அந்த நாட்டின் கைபர் பக்துவா மாகாணத்தில் கரக், வடக்கு வசிர்ஸ்தான் மாவட்டங்களில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்ப தாக படையினருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இந்தத் தக வலின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை அப்ப குதிக்கு விரைந்து சென்ற படை யினர் தேடுதல் வேட்டை நடத் தினர். அப்போது, அங்கு பதுங் கியிருந்த பயங்கரவாதிகள் துப் பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தினர். இதையடுத்து படையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் 15 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொல்கத்தா - பஞ்சாப் ஆட்டம் இரத்து

கொல்கத்தா, ஏப். 28

கொல்கத்தா - பஞ்சாப் ஆட்டம் மழை காரணமாக இரத்து செய்யப்பட்டது.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 44ஆவது லீக் ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 201 ஓட்டங்கள் குவித்தது.

பின்னர் 202 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய கொல்கத்தா அணி முதல் ஓவர் முடிவில் விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மழை குறுக்கிட்டது. மழை பலமாக கொட்டியதால் மைதானத்தில் அதிகளவில் தண்ணீர் தேங்கியது. மழை நீடித்ததால் போட்டியை தொடர முடியாத நிலை ஏற்பட்டது.
இதைத்தொடர்ந்து இரவு 11 மணியளவில் ஆட்டம் இரத்து செய்யப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர். இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளி பகிர்ந்தளிக்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி துடுப்பாட்டம் செய்தபோது இந்திய வீரர்களான நேஹல் வதேரா, ஷஷாங்க் சிங் ஆகியோருக்கு முன்னதாக வெளிநாட்டு வீரர்களான மக்ஸ்வெல், மார்கோ ஜான்சன் மற்றும் ஜோஷ் இங்கிலிஸ் ஆகியோர் களமிறங்கியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் நடப்பு தொடரில் சுமாராக விளையாடிவரும் மக்ஸ்வெல் 7 ஓட்டங்கள் (8 பந்துகள்) மற்றும் மார்கோ ஜான்சன் 3 ஓட்டங்கள் (7 பந்துகள்) மட்டுமே அடித்து இறுதிக் கட்டத்தில் பஞ்சாப் அணியின் ஓட்ட வேகம் குறைந்ததில் முக்கிய பங்கு வகித்தனர்.

இந்த நிலையில், பஞ்சாப் அணி புள்ளிப் பட்டியலில் முதல் 2 இடங்களுக்குள் வந்தாலும் கிண்ணத்தை



வெல்ல முடியாது என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் மனோஜ் திவாரி விமர்சித்துள்ளார். அதற்கு அந்த அணியின் பயிற்சியாளர் ரிக்கி பொண்டிங்தான் காரணம் என்றும் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "இந்த சீசனில் பஞ்சாப் அணியால் கிண்ணத்தை வெல்ல முடியாது என்று என் உள்ளுணர்வு சொல்கிறது. ஏனென்றால் அவர்கள் துடுப்பாட்டம் செய்யும்போது நான் பார்த்தது என்னவென்றால், பயிற்சியாளர் இந்திய துடுப்பாட்ட வீரர்களான நேஹல் வதேரா மற்றும் ஷஷாங்க் சிங்கை அனுப்பவில்லை. மாறாக அவர் தனது வெளிநாட்டு வீரர்களை நம்பினார்.

இது அவருக்கு இந்திய வீரர்கள் மீது உள்ள நம்பிக்கையின்மையை தெளிவாகக் காட்டியது. அவர் இந்த வழியில் தொடர்ந் தால், முதல் இரண்டு இடங்களில் தகுதி பெற்றாலும் கிண்ணம் அவர்களிடமிருந்து வெகு தொலைவில் உள்ளது"-என்று பதிவிட்டுள்ளார். (எ)

# மும்முனை ஒருநாள் தொடர் இலங்கை ஏ அணி சம்பியன்



அபுதாபி, ஏப். 28

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் அபுதாபி ஸய்யத் கிரிக்கெட் மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏ அணிகளுக்கு இடையிலான மும்முனை ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அயர்லாந்து ஏ அணியை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் மிக இலகுவாக வெற்றி கொண்ட இலங்கை ஏ அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

இந்தத் தொடர் எக்ஸ்ப்லோர் ஆப்கானிஸ்தான் மும்முனை தொடர் என்று பெயரில் நடத்தப்பட்டது.

இந்த சுற்றுப் போட்டியில் இலங்கை ஏ அணி சகல போட்டிகளிலும் வெற்றி பெற்று சம்பியனானது.(எ)

# ஜோகோவிச் தோல்வி

மட்ரிட், ஏப். 28

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.



மட்ரிட் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில், முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடி வருகின்ற னர். இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 2ஆவது சுற்றுக்கு நேரடியாக தகுதி பெற்றார்.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற 2ஆவது சுற்றில் ஜோகோவிச், இத்தாலியின் மேட்டியோ அர்னால்டியுடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 3-6, 4-6 என்ற செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார். (எ)

# சென்னை அணியை வீழ்த்தி ஹைதராபாத் அணி வெற்றி



சென்னை, ஏப். 28

5 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி ஹைதராபாத் அணி அபார வெற்றிபெற்றது.

நடப்பு ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் 43ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை 19.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 154 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய ஹைதராபாத் 18.4 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் சென்னையை 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஹைதராபாத் அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில், இந்த வெற்றியின் மூலம் சேப்பாக்கத்தில் ஹைதராபாத் அணி தனது முதல் வெற்றியை பதிவு செய்துள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் இதற்கு முன் சென்னை - ஹைதராபாத் அணிகள் 5 முறை மோதின. இதில் 5 ஆட்டத்திலும் சென்னை வெற்றி பெற்றது.

தற்போது சேப்பாக்கம் மைதானத்தில் தனது முதல் வெற்றியை ஹைதராபாத் அணி பதிவு செய்துள்ளது. மேலும்,

சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் சென்னை அணியின் கடந்த கால ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் தோல்வியை தழுவிய சென்னை சுப்பர் கிங்ஸ் நடப்பு ஐ.பி. எல். தொடரிலிருந்து வெளியேறியுள்ளது. (எ)

# "பாகிஸ்தானுடன் கிரிக்கெட் உறவை முறிக்க வேண்டும்"

மும்பை; ஏப். 29

பாகிஸ்தானுடனான கிரிக்கெட் உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்று சவுரப் கங்குலி தெரிவித்தார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 சுற்றுலாப் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதன் எதிரொலியாக இனிவரும் காலங்களில் பாகிஸ்தானுடன் இரு தரப்பு தொடர்களில் விளையாட மாட்டோம் என்று இந்திய கிரிக்கெட் சபையான பி.சி.சி.ஐ. உறுதியளித்துள்ளதாக தகவல் வெளியாகியிருந்தது. இந்த நிலையில், பாகிஸ்தானுடனான கிரிக்கெட் உறவை 100 சதவீதம் முறித்துக் கொள்ள வேண்டும் என இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், 100 சதவீதம் இந்தியா இதைச் செய்ய வேண்டும். (பாகிஸ்தானுடனான உறவுகளை முறித்துக் கொள்ள வேண்டும்). கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதுபோன்ற விடயங்கள் ஒவ்வொரு ஆண்டும் நடப்பது நகைச்சுவையாக மாறிவிட்டது. பயங்கரவாதத்தை பொறுத்துக்கொள்ள முடியாது- என்றார். (எ)

# மட்ரிட் ஓபின் ரென்னிஸில் மிர்ரா ஆண்ட்ரீவா வெற்றி



மட்ரிட், ஏப். 28

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் போட்டியில் மிர்ரா ஆண்ட்ரீவா வெற்றி பெற்றார்.மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரஷ்யாவின் மிர்ரா ஆண்ட்ரீவா, போலந்தின் மாக்டலீனா ப்ரெச் உடன் மோதினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே அபாரமாக செயல்பட்ட மிர்ரா ஆண்ட்ரீவா 7-5, 6-3 என்ற செட் கணக்கில் மாக்டலீனா ப்ரெச்சை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (எ)

# முத்தரப்பு தொடர் ஆரம்பம் இலங்கை அணி சொதப்பல்



கொழும்பு, ஏப். 28

முத்தரப்பு மகளிர் ஒருநாள் தொடர் இலங்கையில் நேற்று ஆரம்பமானது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 147 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா ஆகிய 3 நாட்டு மகளிர் அணிகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறுகிறது. மே 11ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் ஒவ்வொரு அணியும், மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோதும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெறும்.

இந்த தொடரில் நேற்று நடைபெற்ற தொடக்க லீக் ஆட்டத்தில் இந்தியா - இலங்கை அணிகள் மோதின.

கொழும்பில் நேற்றுக்காலை மழை பெய்ததன் காரணமாக இந்த ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

இந்த நிலையில், இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. மழை காரணமாக இந்தப் போட்டி 39 ஓவர்கள் கொண்ட ஆட்டமாக நடைபெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த...

பரீட்சையில் 10.66 சதவீத மானோர் எந்தப் பாடத்திலும் சித்தியடையவில்லை.

கல்விக்காக அரசு பெருமளவு நிதியை ஒதுக்கினா லும், ஆண்டுதோறும் ஏராளமான மாணவர்கள் பரீட்சையில் தேர்ச்சி பெறத் தவறுவது கவலையளிக்கிறது. எனினும், மூன்று முக்கிய பாடங்களிலும் 9 ஆயிரத்து 458 மாணவர்கள் 'ஏ' சித்திகளை பெற்றுள்ளனர். இது பரீட்சை எழுதிய பரீட்சார்த்திகளில் 3.45 சதவீதமாகும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் கூறினார்.

இதனிடையே, பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க தகுதியுடைய மாணவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டை விட அதிகரித்துள்ளது - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## ஐரோப்பிய...

தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் என பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

இதனிடையே, இன்றைய தினம் கூடும் அமைச்சரவை, பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்பன குறித்து முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளன என்று அரச தரப்பின் முக்கியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதன்படி, நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்கவும் புதிய சட்டம் ஒன்றை நிறைவேற்றவும் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. நிகழ்நிலை பாதுகாப்பு சட்டத்தை முழுமையாக நீக்காது திருத்தங்களை கொண்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையில் பயனடையும் குறைந்த அல்லது நடுத்தர வருமானமட கொண்ட 8 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் நல்லாட்சி தொடர்பான 27 சர்வதேச மரபுகளை அங்கீகரித்த பொருளாதார ரீதியில் பாதிக்கப்படக் கூடிய வளரும் நாடுகளின் நலன் கருதி இந்த சலுகை வழங்கப்படுகிறது. ஜி.எஸ். பி பிளஸ் வரிச் சலுகையை பெறும் நாடுகளை இரு வருடங்களுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்து சலுகைக்கான ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும்.

இந்தநிலையில் மனித உரிமைகளின் பாதுகாப்புக்கு நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடுப்பு சட்டம் கடும் சவாலாக உள்ளமையால் அதனை நீக்குவதற்கான பரிந்துரையை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கனவே இலங்கைக்கு விடுத்திருந்தது. எனவே, ஜி. எஸ். பி. பிளஸ் சலுகை மீண்டும் நீடிக்கப்பட வேண்டுமானால் அரசாங்கம் சில நிபந்தனைகளை நிறைவேற்றவேண்டும். அவற்றில் முக்கியமானது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்வதாகும்.

ஆனால், இந்த சட்டத்தை நீக்குவதில் அரசாங்கம் மெத்தனப் போக்கையே கடைப்பிடிக்கிறது. இதனிடையே பயங்கரவாத சட்டத்தை பயன்படுத்தி கைதும் செய்துள்ளது என்பதும் சுட்டிக்காட்டத் தக்கது.

அமெரிக்காவின் தீர்வை வரியால் நெருக்கடியை எதிர் கொண்டுள்ள இலங்கை பொருளாதாரம், ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகையையும் இழக்குமானால் மேலும் பலத்த நெருக்கடியை எதிர்கொள்ளும் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இதேநேரம், இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி இடமாக ஐரோப்பிய ஒன்றியம் உள்ளது. கடந்த ஆண்டு 270 கோடி யூரோவை இலாபமாக இலங்கை ஈட்டியது. இந்த ஏற்றுமதிகளில் 85 சதவீதம் ஜி. எஸ். பி. பிளஸ் வரிச் சலுகை மூலம் கிடைத்தது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

## தமிழரின் அபிலாசைகள்...

ஆளும் தரப்பிடம் இந்த பிரதேச சபையின் ஆட்சி அதிகாரம் செல்லுமாக இருந்தால் இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வேலையை இலகுவாக நடைமுறைப்படுத்துவார்கள்.

பாராளுமன்றில் எங்களுக்கு அடுத்தபடியாக இருந்த ஒரு கட்சி இன்று தேர்தல் மூலம் தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்துள்ளது. ஊழல், துஷ்பிரோயகம் என்று மாறிமாறி ஆட்சி செய்த தரப்புகளின்மீது மக்களுக்கு வெறுப்பு இருந்தது. எனவே, அவர் (அநுர) 42 சதவீதம் வாக்குகளை எடுத்திருந்தாலும். மாற்றம் வருகிறது என்ற எதிர்பார்ப்பிலே அடுத்துவந்த பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை பலத்தை மக்கள் கொடுத்தனர்.

சாணக்கியனின் தனி முயற்சியால் கிழக்கு தப்பிவிட்டது. துரதிர்ஷ்டவசமாக வடக்கிலும் அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது. ஆனால், எப்படியான முடிவு பாராளுமன்றத் தேர்தலில் வந்திருந்தாலும் அங்கு மூன்றாவது பெரிய கட்சியாக இருப்பது தமிழ் அரசுக் கட்சியே. ஒரு குடியும் மூழ்கிப் போகவில்லை - குறைந்திருக்கிறதுதான் ஆனாலும், நாங்கள்தான் இன்றும் பிரதான தமிக் கட்சி அதில் மாற்றமில்லை.

தேர்தல் முறைமையால் ஏற்பட்ட பிரதிபலனை வைத்து தமிழ் மக்களின் ஆணையும் எங்களுக்குத்தான் இருக்கிறது. ஆகவே, தமிழ்த் தேசிய பிரச்னையை தாங்கள் பார்த்துக்கொள்வோம் என்று கூறும் அவர்கள் அதிகாரப் பகிர்வில் நம்பிக்கை இல்லாதவர்கள். வடக்கு - கிழக்கு இணைப்பையும் பிரித்தவர்கள். அவர்கள் தமிழரின் ஆணை எங்களிடம் தான் இருக்கிறது என்று சொன்னால் அதைவிட அபத்தம் வேறு எதுவுமில்லை. அதைவிட மோசமான ஆபத்து எதுவும் கிடையாது. அந்த ஆபத்தை உடனடியாக நீக்க வேண்டும்.

எனவே, பாராளுமன்ற தேர்தலுக்கு பின்னரான முதலாவது சந்தர்ப்பம் இந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தல். இதில் தான் அதனை புறந்தள்ளமுடியும். எமக்கு ஒற்றையாட்சியிலே இணக்க மில்லை. முறையான அதிகாரப் பகிர்வு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளின் உறுதியான மக்கள் தீர்ப்பு தேர்தல்களில் இருந்தே வருகிறது. எனவே கடந்த தேர்தல் மயக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் அதனை களையக்கூடிய முதலாவது சந்தர்ப்பமாக இது உள்ளது.

உள்ளூரின் ஆட்சியைக்கூட நாங்கள் தக்கவைக்க முடியாவிட்டால் தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று பரப்புரை செய்யக்கூடும். எனவே, நாட்டுக்கும் உலகுக்கும் தெளிவான ஒரு செய்தியை சொல்லக்கூடிய ஒரு சந்தர்ப்பம் இது. அதனை நாம் நழுவ விடக்கூடாது.

எங்களுக்கு தேவை தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் அப்பிடியேதான் இருக்கின்றன. அதில் மாற்றமில்லை. அதைசொல்வது எப்படி. வாக்குகளை சிதறடித்துவிட்டு சொல்ல முடியாது. எனவே, அதனை ஒருமுகப்படுத்தி சமஷ்டி என்ற ஒரே நிலைப்பாட்டில் இருக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்குகளை கொடுத்தால் எங்கள் அரசியல் நிலைப்பாட்டில் ஓர் உறுதி இருக்கும். எமது நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்ற கனமான செய்தி சொல்லப்படும் - அது கேட்கப்படும் - அதுவே பலமானதாக இருக்கும் - என்றார்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியாவில் தேர்தல் பரப்புரையில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தமிழ் மக்கள் தங்களுக்கே அதிகம் வாக்களித் துள்ளனர். நாங்களே மிகப்பெரிய தமிழ்க் கட்சி என்று கூறியமையும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## வட,கிழக்கில்...

குறிப்பிட்டுள்ளவை வருமாறு,

இந்த மழை மேற்காவுகைச் செயல்பாட்டால் உருவாகும் மழையாகும். அதனால் நண்பகல் வரை கடுமையான வெப்பநிலையுடன் கூடிய வானிலை நிலவும். பின்னர் பிற்பகல் 2.00 மணியளவில் மழை கிடைக்கும்.

இது மேற்காவுகை செயல்பாட்டால் உருவாகும் மழை என்பதனால் இடி, மின்னலோடு கூடிய மழையாகவே கிடைக்கும். அதிலும் இந்த இடி, மின்னல் தாக்கத்தின்போதான மின்னேற்றம் முகில்களுக்கும் புவி மேற்பரப்பிற்குமிடையில் பரிமாற்றப்படுவதனால் குத்தான இடி, மின்னலாகவே இருக்கும். இடி, மின்னல் வகைகளில் இதுவே அதிக சேதத்தை ஏற்படுத்தவல்லன. எனவே, இது தொடர்பாக மக்கள் அவதானமாக இருப்பது அவசியம்.

இதேவேளை எதிர்வரும் மே 10ஆம் திகதி வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப் புள்ளது. பொதுவாக தமிழுக்கு சித்திரை 28 என்பது சித்திரை குழப்பத்தின் மைய நாளாகக் கருதப்படும். சித்திரை ஒரு சிறு மாரி என்ற கருத்தும் எம் மத்தியில் உள்ளது. எதிர்வரும் மே 10ஆம் திகதி உருவாகும் தாழமுக்கம் இவ்வாண்டின் சித்திரை குழப்பத்தின் தோற்றுவாயாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தாழமுக்கம் எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கணிசமான அளவு மழையைக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சித்திரை குழப்பமே தென்மேற்குப் பருவக்காற்று உடைவுக்கும் காரணமாக அமைவதுண்டு. அந்த வகையில் இந்த ஆண்டு, தென் மேற்கு பருவமழை மே மாதத்தின் பிற்பகுதியில் உருவாகும் வாய்ப்புள்ளது.

இதேவேளை இந்த ஆண்டின் காண்டாவனம்( அக்கினி நட்சத்திரம்) எதிர்வரும் மே 4ஆம் திகதி ஆரம்பித்து மே 28ஆம் திகதி நிறைவடைகிறது. (ஐ)

## தேசிய...

குருநாகல்.

இரண்டாமிடம் - கல்பா விதுசராணி - அநுராதபுரம் மத்திய கல்லூரி.

மூன்றாமிடம் - யமுனானந்தா பிரணவன் - இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்

**கணிதப் பிரிவு**

முதலாமிடம் - லசந்து ரன்சர குமாரகே - பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா.

இரண்டாமிடம் - கந்ததாசன் தசரத் - ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை - யாழ்ப்பாணம்.

மூன்றாமிடம் - தெவிந்து தில்மித் தஹநாயக்க - பண்டாரநாயக்க கல்லூரி, கம்பஹா.

**வணிகப் பிரிவு**

முதலாமிடம் - அமாஷா துலாரி - விசாகா வித்தியாலயம், கொழும்பு.

இரண்டாமிடம் - இந்துவர சன்ஹித குமாரபேலி - றோயல் கல்லூரி, கொழும்பு.

மூன்றாமிடம் - லெசண்டி உதார பெரேரா - சுஜாதா வித்தியாலயம், கொழும்பு.

**கலைப் பிரிவு**

முதலாமிடம் - செனாலி சமத்க ரணசிங்க - ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா.

இரண்டாமிடம் - தினெத்மி மெத்தங்க ஜனகாந்த - பெர்குசன் உயர் மகளிர் கல்லூரி, இரத்தினபுரி.

மூன்றாமிடம் - இசுரி அஞ்சலிகா பீரிஸ் - மகாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி

**பொறியியல் தொழில்நுட்பம்**

முதலாமிடம்: காவ்யா ரவிஹன்சா - மயூரபாத மத்திய கல்லூரி, நாரம்மல

இரண்டாமிடம் - உஷான் மலித் ஜயசூரிய - சிவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி.

மூன்றாமிடம் - பசிந்து மதுஷங்க - சிறீ சுமங்கல வித்தியாலயம், ஹிக்கடுவை - காலி.

**உயிரியல் தொழில்நுட்பம்**

முதலாமிடம் - நெத்மி நவோத்யா மாரசிங்க - சதலங்க தேசிய பாடசாலை

இரண்டாமிடம் - மஹிஷா பத்திரண - புஷ்பதான பெண்கள் கல்லூரி, கண்டி.

மூன்றாமிடம் - சாமோதி ஹன்சிகா - ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா. (ஐ)

# சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஏப். 28

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி குழுவை சேர்ந்த ஒருவரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ரி-56 துப்பாக்கி தோட்டாக்களை சுடவல்ல உள்நாட்டு தயாரிப்பான துப்பாக்கி ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

பாணந்துறை குடு சலிந்து என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியின் நெருங்கிய கூட்டாளியின் வீட்டிலிருந்தே இந்தத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த சோதனையின்போது, ரி-56 தோட்டாக்களை சுடக்கூடிய ரிவால்வரைப் போன்ற உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, 24 ரி-56 தோட்டாக்கள், சுமார் 2-1/2 அடி நீளமுள்ள ஒரு வாள், 3 டெட்டனேட்டர்கள் ஆகியவை பண்டாரகம பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## காய்சலால்...

சேர்க்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனளிக்காமல் நேற்று காலை அவர் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். அவரின் சடலம் உடற்கூராய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-05)

## திருத்தந்தையின்...

முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸின் கல்லறையில் ஏராளமான வரிசையில் நின்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

முன்னைய திருத்தந்தைகளின் பூதவுடல்கள் வத்திக்கானிலுள்ள புனித சென். பீற்றர்ஸ் பஸிலிக்காவில் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. எனினும், கடந்த நூறாண்டுகளில் வத்திக்கானுக்கு வெளியே நல்லடக்கம் செய்யப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் ஒருவரே என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

## வீரர்களின்...

கல்லூரி அணி 71.3 ஓவர்களில் 245 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதில், எஸ். தர்மிலன் 75, டிலக்சன் 24, மதுசிகன் 24 ஓட்டங்களை எடுத்தனர்.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பந்துவீச்சில் யோவல் றொசான் 3 விக்கெட்களையும் தரணிகன், துளசிகள், கௌதமன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அணி 86.1 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், யோவல் றொசாசன் 84, றியாஸ் முகமட் 59 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர்.

ஸ்கந்தவரோதய கல்லூரியின் பந்துவீச்சில் ம. பிரணவன், சி.கிரிஷிகேசன் ஆகியோர் தலா 4 விக்கெட்களை யும் சி. வசீகரன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதய கல்லூரி 4 விக்கெட்கள் இழப்புக்கு 54 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

மகாஜன கல்லூரி சார்பில் பந்துவீசிய பிரதீஸ்வரன் 2, யோவல் றொசான், துளசிகன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக எஸ். தர்மிலன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சிறந்த களத் தடுப்பாளராக கஜானன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சிறந்த பந்துவீச்சாளராக எம். பிரணவன் (ஸ்கந்தவரோதய கல்லூரி), சிறந்த சகலதுறை வீரராகவும் போட்டியின் நாயகனாகவும் யோவல் றொசான் (மகாஜன கல்லூரி) ஆகியோர் தெரிவாகினர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## கணினி குற்ற புலனாய்வு பிரிவு வவுனியா பணிமனை திறப்பு!



வவுனியா, ஏப். 28

வவுனியா பொலிஸ் தலைமையக வளாகத்தில் கணினி குற்றப் புலனாய்வு பிரிவு அலுவலகம் மற்றும் கேட்போர் கூடம் உட்பட பொலிஸாருக்கான சுற்றுலா விடுதி என்பன நேற்று முன்தினம் பதில் பொலிஸ்மா அதிபரால் திறந்து வைக்கப்பட்டன.

இதன்போது வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபருடன் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது போதைப்பொருள் தடுப்பு தொடர்பிலும் பதில் பொலிஸ்மா அதிபர் கருத்து வெளியிட்டிருந்தார். (ஐ)

உயர்த பரீட்சை பெறுபேறு:

## மே 2 - 16 வரை மீளாய்வுக்கு விண்ணப்பிக்க முடியும்!

கொழும்பு, ஏப். 28

கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக மே 2 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சார்த்திகள் ONLINE EXAMS.GOV.LK எனும் இணையத்தளத்துக்குள்பிரவேசித்து பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இம்முறை உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கமைய ஒரு இலட்சத்து 77 ஆயிரத்து 588 பேர் பல்கலைக்கழகத்திற்காக தகுதி பெற்றுள்ளனர்.

அத்துடன், 456 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்றும் பரீட்சை திணைக்களம் தெரிவித்தது. (ஐ)

புதிய கல்வி சீர்திருத்தம்:

## ஆசிரியர்களுக்கான பயிற்சி மே மாதம் ஆரம்பிக்கப்படும்!

### பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28



புதிய கல்வி சீர்த்திருத்துக்கு அமைய ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகள் மே மாதம் ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கம்பஹா - மீரிகம - மினுவங் கொடை மற்றும் கட்டான பகுதிகளில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனை குறிப்பிட்டார்.

சிறுவர்களின் ஆரம்ப கல்வி முக்கியமாக இருந்தாலும் அதற்குரிய முறைமையொன்று இல்லை. தற்போது இதற்கான முறைமையொன்று தயாரிக்கப்படுகிறது. சிறுவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோருக்கு தொந்தரவு இல்லாத கல்வி முறை 2026 முதல் ஒன்று மற்றும் ஆறாம் வகுப்புகளுக்கு அறிமுகப்படுத்தப்படும்.

புதிய பாடத்திட்டத்துக்கான ஆசிரியர் மட்ட பயிற்சிகள் மே மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படும். கடந்த காலங்களில் ஆசிரியர்களை நியமிப்பது முறையாக இல்லை. எதிர்காலத்தில் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இந்தியாவுடனான தரைவழி இணைப்புக்கு தயாரில்லை!

### அறிவித்தது அரசாங்கம்

கொழும்பு, ஏப். 28

**இந்தியாவின் நீண்டகால ஆர்வமும், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின்போது விரைவான முன்னேற்றங்களைக் கண்ட இரு நாடுகளுக்கும் இடையிலான நில இணைப்புக்கு தயாராக இல்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளதாக அறிய வருகிறது.**

இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையில் நில இணைப்பை ஏற்படுத்தி, அதனை அதிவேக நெடுஞ்சாலை ஊடாக திருகோணமலையை இணைப்பது இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக உள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அண்மைய இலங்கை வருகையின்போது முன்னெடுக்கப்பட்ட 7 ஒப்பந்தங்களில் இரு நாடுகளுக்கு இடையிலான நில ரீதியான இணைப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது. 2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்போதைய இந்திய பிரதமாரான அடல் பிஹாரி வாஜ்பாய்க்கும் இடையில் இரு நாடுகளுக்கு இடையில் பாலம் அமைப்பதற்கான முதலாவது இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

ஆனால், நாட்டிலிருந்த போர் சூழல் இரு நாடுகளுக்கு இடையில் நில இணைப்பை ஏற்படுத்துவதில் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இருப்பினும், 2022ஆம் ஆண்டில் மீண்டும் இரு நாடுகளுக்கு இடையிலான இணைப்புகள் குறித்து பேச்சுகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக, 2023 ஆம் ஆண்டில் ஜனாதிபதி என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு சென்றிருந்தபோதிலும், கடந்த ஆண்டில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கை வந்திருந்த போதும் எட்டப்பட்ட ஒப்பந்தங்களில், இரு நாடுகளையும் தரைவழி பாலம் மூலம் இணைக்கும் திட்டம் மையமாக இருந்தது.

இந்நிலையிலேயே, ரணில் விக்கிரமசிங்கவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை முன்னெடுப்பதில் இந்தியா மிகுந்த ஆர்வம் காட்டிய போதிலும், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் அரசாங்கம் இரு நாடுகளுக்கு இடையிலான நில இணைப்பு யோசனையை நிராகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# அமெரிக்காவுடனான பேச்சு; கூட்டு அறிக்கை எங்கே?

### எதிர்க்கட்சி தலைவர் கேள்வி

கொழும்பு, ஏப். 28

இந்த வரியை திருத்துவது தொடர்பான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த போதிலும், அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று கம்பஹா ஹோமகமவில் நடந்த பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும், தேர்தல் நெருங்கும் நேரத்தில் கிராமத்தின், நகரத்தின் அதிகாரம் குறித்து மக்கள் தெளிவான முடிவை எடுக்க வேண்டும். இந்த முடிவை எடுப்பதில், ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின்போது நாட்டுக்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனங்கள் மற்றும் வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என்பதை ஆராய்ந்து பார்ப்பது மிகவும் முக்கியமானதாகும்.

தற்போது, சமூகம் கொலைகாரர்களின் பிடியில் சிக்கியுள்ளது. மிருகத்தனம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம் என்பன சமூகத்தை ஆட்கொண்டுள்ளன. எந்நேரத்தில் எங்கு என்ன நடக்கும் என தெரியாதுள் ளது. வீடுகளிலும் வீதிகளிலும் பணியிடங்களிலும் நீதிமன்றத்தில் நீதிபதிகள் முன்னிலையிலும் துப்பாக்கி சூடுகள் நடக்கின்றன. பிள்ளைகள், பெற்றோர்கள், பெண்கள் முன்னிலையிலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. சரமாரியாக துப்பாக்கிச் சூடுகளை நடத்தும் பாதாள உலகக் கும்பல்களின் பிடியில் நாடு சிக்கித் தவிக்கின்றது.



நாட்டின் பிரஜைகளின் வாழ்வுரிமையை உறுதிப்படுத்துவதும், சட்டத்தை அமுல் படுத்துவதும், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதும் அரச தலைவரின் பொறுப்பாகும். இது ஜனாதிபதியின் பொறுப்பாகும். ஆனால், இந்த ஜனாதிபதியின் கீழ் சட்டத்தின் ஆட்சி சீர்குலைந்துபோயுள்ளது.

பொலிஸ் மற்றும் படையினருக்கு மேலதிகமாக கிராம மட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களையும் சமூகப் பாதுகாப்புக் குழுக்களையும் நிறுவி, மக்களின் பங்களிப்புடன் சகல பிரதேசங்களையும் பாதுகாக்க முடியும். உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக மக்களை மையமாகக் கொண்டு பொலிஸ் மற்றும் படையினருடன் இணைந்து செயல்படுவதன் மூலம் சட்டம் ஒழுங்கைப் பேண முடியும்.

அத்துடன், திசைகாட்டி அரசு தலைமையிலான ஜனாதிபதி எழுதிய கடிதத்தால், டொனால்ட் ட்ரம்ப் விதித்த தீர்வை வரி 90 நாட்களுக்கு நிறுத்தப்பட்டதாக பிரதி அமைச்சர் ஒருவர் பிரஸ்தாபித்தார். பின்னர் வேறு ஒரு தூதுக் குழு அமெரிக்கா பயணமாகி கலந்துரையாடல்கள் எமக்கு சாதகமாக இறுதி செய்யப்பட்டுள்ளன.

இந்த வரியை திருத்துவது தொடர்பான பேச்சுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதால், இந்த விடயம் தொடர்பாக இரு தரப்பினரும் கூட்டு அறிக்கையை வெளியிட திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்த போதிலும், அவ்வாறான அறிக்கை எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை. இவ்வாறான பொய்களை சொல்லி மக்களை ஏமாற்றி வருகின்றனர் - என்றார். (ஐ)

## ஓட்டோ மோதி ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ். போதனா மருத்துவமனை முன்பாக நடந்து சென்றவரை ஓட்டோ மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில், ஆஸ்பத்திரி வீதியை சேர்ந்த அன்ரனி தேவதாஸ் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்தவர் கடந்த வியாழக்கிழமை பணிக்கு சென்றுவிட்டு மாலை வீடு நோக்கி சென்றுகொண்டிருந்தார். அப்போது, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக ஓட்டோ அவரை மோதியது.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை அவருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

அவரின் சடலம்மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-05)

## தமிழர்களின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும்!

### சாள்ஸ் நிர்மலநாதன் வலியுறுத்து

மன்னார், ஏப். 28

தமிழர்களின் அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், தமிழர்கள், தமிழர்களாக வாழ வேண்டும் எனவும், வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாட்டான் பிரதேச உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர்களை ஆதரித்து, நடைபெற்ற பிரசார கூட்டத்தில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.